

# தென்மொழி

## தமிழ் நாட்டின் உரிமை மீட்போம் !

தமிழை மீட்க வேண்டும் — தமிழ்
இனத்தை மீட்க வேண்டும்!
கமழக் கமழத் தமிழன் நாட்டைக்
கடிதில் மீட்க வேண்டும்!

அமிழப் போவதிலலை — வேறு
ஆசை நமக்கிங் கில்லை!
இமையும் பொறுப்ப தில்லை — முன்
இழந்த உரிமை வேண்டும்!

வடவன் மொழியும் வேண்டாம் — அவன்
வழியும் நமக்கு வேண்டாம்!
வடவர் ஆட்சி வேண்டாம் — நாம்
வாழ உரிமை வேண்டும்!

பொறுத் திருந்து விட்டோம் — பூனை
போல வாழ்ந்து விட்டோம்!
வெறுத்து விட்ட தாட்சி — தமிழ்
வீர வாழ்க்கை வேண்டும்!

கோழை யாகப் போனோம் — ஊமைக்
குருட ராக வாழ்ந்தோம்!
ஏழ்மை தொலைய வில்லை — தமிழ்
நாட்டின் உரிமை மீட்போம்!

**—பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

—15.2.1993 (சென்னை - கொடுஞ்சிறையில் (தடா) இருக்கையில் எழுதப்பெற்றது)

## உள்ளே...


இந்துமதம் ஒரு சாப் பள்ளத்தாக்கு!

வஞ்சப் புகழ்ச்சியா நெஞ்சார்ந்த பொய்யா?

அறுபருவத் திருக்கூத்து —முன்பனிக் காலம்—

வழிபாட்டு மொழி மயக்கமும் தயக்கமும்!

கைவிட்ட கொள்கைகளும் கைக்கொண்ட சூழ்ச்சிகளும்

நமக்கடிமை இனித்திதென்ன?

மக்களவை

செய்திகள்



சுவடி - 30
ஓலை - 3
விலை உரு. 4-00

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. 2029 மீனம் (மார்ச்சு - 1998)



# இந்து மதம்
# ஒரு சாப் பள்ளத்தாக்கு!

மதம் என்பது நாமெல்லாம் வியந்து பேசுமளவிற்கு அத்துணை உயர்ந்ததன்று என்றாலும், மிக வலிந்த ஒன்று. பொதுமக்களைக் கட்டுப் படுத்தும் ஒரு கட்டமைப்பு. ஒரு பெரிய நம்பிக்கை வலை. நாம் விரும்பாமலேயே வீழ்ந்து கிடக்கும் ஒரு படுசேற்றுப் பள்ளம். அதை ஒரு கடவுள் கட்சி என்றுங்கூட விளங்கிக் கொள்ளும்படி கூறலாம். இக்கால் உள்ள திரைப்படங்களுக்குள்ள கவர்ச்சியும் விளம்பர ஆரவாரங்களும் மதங்களுக்கு உண்டு. இக்காலத்து அரசியல் கட்சிகளைப் போன்றவையே மதங்களும். கட்சிகளை ஒழிக்க ஒழிக்க வேறொரு வடிவில் அவை வளர்ந்து கொண்டே வருவது போல், மதங்களும் ஒன்று ஒழிய அல்லது மறைய வேறொன்று தோன்றிக் கொண்டே வரும். இக்கால் புது விளம்பரங்கள் பெற்றுள்ள ஐயப்ப மதம், மூகாம்பிகை மதம் போன்ற புதுக்கடவுள் கட்சிகளை நோக்குகின்றவர்களுக்கு நாம் சொல்வதன் உண்மை விளங்கும்.

உலக மதங்களுக்குள் **இந்து மதம்** என்பது, ஆரியப் பார்ப்பனர் களுக்காகவே வளர்த்துக் கொள்ளப்பட்ட, தூர் நிரம்பிய ஒரு மதமாகும். **வேதமதம்** என்னும் நச்சு விதையைச் சுற்றியுள்ள சதைப் பகுதியே இந்து மதம் ஆகும். இந்தச் சதைப்பகுதியை மூடியுள்ள தோல் மிகக் கவர்ச்சியுடைய வண்ணப் பூச்சுகள் கொண்டது; இவ் வண்ணப் பூச்சு ஒன்றினாலேயே மனம் மயங்கிப் போகும் படிக்காத ஏழைப் பொதுமை மாக்கள் இந் நாட்டில் ஏராளம்! தோல் வண்ணத்தால் கவர்ச்சியுற்று, இதன் சதைப் பகுதியைச் சுவைப்பவர் களுக்கு ஏற்படும் மதிமயக்கமும், மத வெறியும் மிகுதி! அதன் இனிமையான இன்பவெறி நுகர்ச்சியிலிருந்து அவர்கள் மீள்வதென்பது அரிதினும் அரிது! ஆனால், அதையும் வேறு பிரித்துணர்ந்து, தன் ஆய்வறிவால், தான் யார், இவ்வுலகம் எது, தன் தோற்ற மாற்ற வாழ்வு வளர்ச்சிக்கு என்ன பொருள் — என்பவை பற்றி யெல்லாம் பகுத்தறிவு வழியினும் மெய்யறிவு வகை யினும் உய்த்துணர்ந்து கொண்டு, மேலே செல்பவர்கள்தாம் அவ் விந்து மதத்தின் நச்சு விதையையும் அதன் தீய நோக்கங்களையும் நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

இந்து மதம் என்பது எவ்வகை மாந்த முன்னேற்றத்திற்கும் சிறிதும் பயன்படாது. மாந்த இனத்தையே கட்டழிக்க வல்ல இக் கொடிய மதம், அடித்து நொறுக்கப்பட வேண்டிய காட்டு விலங்கு! சுட்டுப் பொசுக்கப்பட வேண்டிய ஒரு நச்சுக் காடு! தூர்த்து மூட வேண்டிய ஓர் அறியாமை நச்சுப் பொய்கை! மக்களை முன்னேற விடாமல் மடமைச் சேற்றில் புதைந்து போகச் செய்கின்ற படு சேறு நிறைந்த ஒரு சாப் பள்ளத்தாக்கு! இத்தன்மையுள்ள இந்து மதத்தினின்று வெளியேறுவதற்கு மிக்க தன்மான உணர்வும், வெட்டிச் சலுகைகளைத் தூவென்று காறித் துப்பி யெறிகின்ற பற்றற்ற துணிவும், வாழ்க்கை என்பது இதுவென்று தேர்கின்ற மனவிளக்கமும் வேண்டும்.

—பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(தென்மொழி – ஆசிரியவுரை – சுவடி 17. ஓலை. 12—1981)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)


நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்




# தென்மொழி

மொழி — இனம் — நாடு

**நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.


ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி.30) தி.பி. உ0உகூ – மீனம் (மார்ச்சு-'98) (ஓலை.3


# வஞ்சப் புகழ்ச்சியா நெஞ்சார்ந்த பொய்யா?

தமிழ் அறிஞர்கள் – உணர்வாளர்களின் அறிவுறுத்தலான வேண்டுகோளுக்குச் செவிசாய்க்காமலும் கண்டனங்களைப் பொருட்படுத்தாலும் எதிர்ப்புகளைப் புறக்கணித்தும் தமிழக அரசின் சார்பில் எழுப்பப்பட்டுள்ள மேனாள் முதலமைச்சர் பத்தவச்சலத்தின் நினைவு மண்டபத்தையும் அங்கே நிறுவப்பட்டுள்ள அவரது சிலையையும் அண்மையில் (13.3.98) முதலமைச்சர் கலைஞர் திறந்துவைத்திருப்பதோடு, திருவாளர் பத்தவச்சலம் மாந்தநேயமிக்க மாண்பாளர் என்றும், ஆள்வினை(நிர்வாக)த் திறத்தை அவரிடத்திலேயே தாம் கற்றுக்கொண்டதாகவும் புகழாரம் சூட்டியிருக்கிறார். திறப்பு விழாவின் மூலம் தம் 'கடமை'யை நிறைவேற்றியிருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

ஆனால், ஓரிருநாள் இடைவெளியிலேயே அறிவிப்புச் செய்தும், அழைப்பிதழ்கூட அச்சிடாமலும், வாடிக்கையான தடபுடல்கள் ஏதும் இல்லாமலும் மண்டபத்தையுஞ் சிலையையுந் திறந்து வைத்த தோடு, பேச மறுத்தும், பத்தவச்சலத்தின் குடும்பத்தார் வற்புறுத்தலுக்காகச் சிறிதுநேரமே பேசியும் விரைந்து செல்ல

நேர்ந்தது அந்தக் 'கடமை' நிறைவேற்றத்தில் அவருக்கு ஒரு நெருடலாகவே இருக்கும் போலும்!

தமிழ்மக்கள் என்றென்றும் நினைவில் வைத்துப் போற்றும அளவுக்கோ, அவரது வழியை மற்றவர்கள் பின்பற்றுமாறோ மக்களுக்காகப் பாடுபட்டவரோ, தன்னலமற்ற தலைவரோ, ஈகஞ் செய்த ஏந்தலோ இவ்வரிசையிலான வேறு எத்தகுதியும் உடையவரல்லர் என்பது வெளிப்படை. மக்களுக்கான ஆட்சிப் பொறுப்பேற்கும் ஒருவர் எப்படி இருக்கக்கூடாது என்பதற்குச் சரியான எடுத்துக்காட்டாக அமைந்தவர் பத்தவச்சலம். அவரது பெயரை, அவர் சார்ந்திருந்த பேராயக் கட்சிக் காரர்களேகூடப் பலுக்க (உச்சரிக்க) அஞ்சுகின்றனர். அவரை நினைவுகூர்வது மக்களிடையே தமக்கு மேலும் பின்னடைவையே ஏற்படுத்தும் என்பதனாலேயே அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் யாரும் இத் திறப்புவிழாவில் கலந்துகொள்ளவுமில்லை; கண்டுகொள்ளவுமில்லை!

பத்தவச்சலத்திற்கு மிகப் பரந்த மனப்பான்மையோடு நினைவு மண்டபம் எழுப்பிச் சிலை நிறுவி விழா நடத்தித் திறந்துவைத்துப் புகழாரம் சூட்டிக் கலைஞர் 'கடமை' நிறைவேற்றுகின்ற நேரத்தில் இன்னொன்றும் நம் நினைவுக்கு வருகின்றது.

கர்நாடக மாநிலத்தில் – வெங்காலூரில் திருவள்ளுவர் சிலை யொன்று கடந்த ஏழாண்டுகளாக முழு முக்காடிட்டு மூடிவைக்கப் பட்டிருக்கின்றது. வெங்காலூர்த் தமிழ்க் கழகம் முயற்சி யெடுத்து மாநகராட்சியில் முறையாக ஒப்புதல் பெற்று நிறுவிய அச்சிலையைத் திறக்கக் கூடாதென்று அங்குள்ள அரசியல் வெறியர்கள் வழக்கு மன்றத்தின்மூலம் தடைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். வெங்காலூர்த் தமிழ்க் கழகத்தாரும் அங்குள்ள தமிழர்களும் எத்துணை முயன்றும் அச்சிலையைத் திறக்க முடியவில்லை!

'திராவிட' முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற முறையிலோ, தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையிலோ, 'உலகெங்கும் வாழும் ஒட்டுமொத்தத் தமிழினத்தின் நம்பிக்கை விண்மீன்' என்று வண்ணிக்கப்படுவதற்கு ஏற்பவோ வெங்காலூரில் திருவள்ளுவர் சிலை திறப்புக்கான தடையை உடைக்க முத்தமிழ் அறிஞர் எத்தகைய முயற்சியையும் மேற்கொண்டதாகத் தெரிய வில்லை. அவர் வரிந்து கட்டிக்கொண்டு தூக்கிப்பிடிக்கும் இந்தியத் தேசியமோ, உரக்கப்பேசும் இந்திய ஒருமைப்பாடோ கன்னடகத்து அரசியல் வெறியர்களின் அடாவடித்தனத்திற்கு எதிராக ஏதும் செய்யவில்லை!

இதற்கிடையில், சென்னையில் கன்னடப் பாவலர் ஒருவரது சிலையைத் திறக்க இங்குள்ள மாநகராட்சி ஒப்புதல் அளித்துள்ளது. அங்கே திருவள்ளுவர் சிலையைத் திறப்பதற்கான ஏற்பாடாகத்தான் இங்கே முன்கூட்டிக் கன்னடப்பாவலர் சிலைதிறக்க ஆவன செய்யப் படுவதாகச் சொல்லப்படுகிறது. இது உண்மையானால் தமிழனுக்கு இதைவிட அவமானம் வேறில்லை. உலகப் பெரும்புலவர் திருவள்ளுவர் சிலை ஏழாண்டுக் காலமாகத் திறக்கப்படாமல் இருப்பதற்கு மாற்றாக யாரோ ஒரு கன்னடப் பாவலர் சிலையை இங்கே முன்கூட்டித் திறப்பதென்பது தமிழர்களின் கையாலாகாத் தனத்திற்குச் சரியான எடுத்துக்காட்டு. அப்படியொரு ஏற்பாட்டில் திருவள்ளுவர் சிலையைத் திறப்பதைவிடத் திறக்காமல் இருப்பதே மேல். காவிரிச் சிக்கலில் மட்டுமன்றி இச் சிலைதிறப்பு முயற்சி போன்றவற்றிலுங்கூடக் கலைஞரின் திராவிடவுணர்வும் இந்தியத் தேசியமும் தேசிய ஒருமைப்பாடும் வேலை செய்வதில்லை. மாறாக, தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தைச் செயற்படுத்த வேண்டும்; தமிழை முழுமையான பயிற்சி மொழியாக்க வேண்டும் என்னும் அறிஞர்கள், தமிழுணர்வாளர்களைத் திசைதிருப்புதற்கு நடுவணரசில் தமிழை ஆட்சிமொழியாக்குவோம் என்ற வாய்ப்பேச்சுக்கே இந்தியத் தேசியமும் ஒருமைப்பாடும் பயன்படுகின்றன!

கல்லக்குடியைத் தால்மியாபுரமாக மாற்றக்கூடாது என்று தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்த கலைஞர், சென்னையில் சமற்கிருதக் கலப்பற்றதும், சாதிப் பெயர் ஒட்டாததுமான தங்கசாலை என்னும் நல்லதமிழ்ப் பெயரை வட நாட்டவர் ஒருவர் பெயரால் மாற்றும் அளவுக்குத் தேசிய நீரோட்டத்தால் கலைஞரின் மனப்பான்மை சிதைந்து சீரழிந்துவிட்டது!

ஈண்டு மேலும் ஒன்றனை நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும்.

பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் தமிழ் தழைக்கவும் தமிழினம் மேம்படவும் வாழ்நாளெல்லாம் பாடுபட்டவர்; காரல் மார்க்கசின் பொருளியல் தெளிவு முதல், தென்னாட்டுப் போர்க் களங்கள் உட்பட அவர் நல்ல தமிழில் எழுதியுள்ள பயனுறு நூல்கள் இருநூற்றை எட்டும். அவரது கழக ஆங்கிலத் தமிழ்க் கையகரா திதான் இன்னமும் பலர் கையில் இருக்கிறது. அதற்கு ஈடான இன்னொன்று இதுவரை தோன்றவில்லை. தி.மு.கழக வளர்ச்சியிலே கூட அவருக்கும் பங்கு உண்டு.

அத்தகைய அப்பாத்துரையாரின் இறுதிநாட்கள் இன்னல் தோய்ந்தவை. அவருடைய மறைவுக்குப் பிறகு அவரது குடும்பம் அன்றாட வாழ்க்கைக்கே அலக்கணுற்றது. தம் வாழ்க்கை நலங்

களுக்காக யாரிடமும் எதையும் நாடிச் சென்றறியாத பாவலரேறு ஐயா அவர்கள், அப்போதும் முதலமைச்சராக இருந்த கலைஞரை ஒருமுறையன்று பலமுறை சென்றுகண்டு அப்பாத்துரையாரின் குடும்பத்துக்கு உதவுமாறு வற்புறுத்தி வேண்டினார். ஆனால், அலமேலு அம்மையார் (அப்பாத்துரையாரின் துணைவியார்) தி.மு.க.விலிருந்து கட்சிமாறி ம.கோ. இரா.வின் பக்கம் சென்றவர் என்பதனால் சிறிதளவு உதவி செய்யவுங் கலைஞர் இசையவில்லை. ''அந்த அம்மையார் மனந்திருந்தி விட்டார்; மன்னிப்பு வேண்டுகிறார்'' என்று எடுத்துக் கூறியும் அவர் அதைப் பொருட் படுத்தாது கண்ணோட்டஞ் சிறிதுமின்றி மறுத்துவிட்டார். வறிதே மீண்ட பாவலரேறு ஐயா அவர்கள் தென்மொழியில் அறிக்கைவிட்டு அன்பர்கள்மூலம் தம்மாலான உதவியைச் செய்தார். இது நெடுநாள் வரலாறன்று; அண்மைக்கால நிகழ்ச்சி!

அருந்தமிழுக்காக அயராது பாடுபட்ட அறிஞர் பெரு மகனாருக்கு – அவரது குடும்பத்தாருக்கு உதவ மறுத்த கலைஞர், தமிழ்காக்கக் கிளர்ந்தெழுந்த மாணவர்களையும் தமிழ்மறவர்களையும் கண்ணோட்டஞ் சிறிதுமின்றி நூற்றுக்கணக்கில் சுட்டுக்கொன்றது மட்டுமல்லாமல் தமிழ் வாழ்க என்று முழங்கியவாறு தம்மையே மாய்த்துக் கொண்ட மான மறவர்களைப் பகடி பண்ணியும் இழிவுபடுத்திய பத்தவச்சலத்துக்கு மக்கள் பணத்தைச் செலவிட்டு நினைவுமண்டபம் எழுப்புகிறார்; சிலை நிறுவுகிறார்! அவற்றைத் திறந்துவைத்துப் பத்தவச்சலம் மாந்தநேயத்தில் சிறந்த மாண்பாளர் என்று புகழாரம் சூட்டுவது வஞ்சப்புகழ்ச்சியில்லை என்றால் ஏதோ ஒரு நயப்பாசை பற்றிய நெஞ்சார்ந்த பொய்யாகவே இருத்தல் வேண்டும்!

அன்றியும் பத்தவச்சலம் ஆள்வினை(நிர்வாக)த் திறமிக்க ஆற்றலாளர் என்றும் ஆள்வினையைப் பொறுத்த அளவில் அவரே தம் குருதேவர் என்றும் கூறியிருக்கிறார். பத்தவச்சலத்தின் ஆள்வினைத் திறம் அவரது ஆட்சிக்கு வீழ்ச்சியையே சேர்த்தது; கட்சியையுங் காப்பாற்றவில்லை!

**''முந்நிற நெடுங்கொடி முன்றிலுஞ் சிதைக!''**
**அன்னோன் தாங்கிய அரசுஞ் சிதைக!**

என்று பாவலரேறு ஐயா அவர்கள் அன்று பாடிய சாவப்படி கடந்த முப்பதாண்டுகட்கு மேலாகத் தமிழ்நாட்டில் பேராயக் கட்சி ஆட்சிக் கட்டிலில் ஏறமுடியவில்லை; கட்சியும் சிதைவுபட்டுக் கிடக்கிறது. பத்தவச்சலத்தைத் தம் குருதேவராகக் கொண்டு கலைஞர் போற்றுகிறார் என்றால் அதன் விளைவு எத்தகையதாக இருக்கும் என்பதை நாம் கூற விரும்பவில்லை!

— **இறை**

# அறுபருவத் திருக்கூத்து

— பாவலரேறு பெருஞ்சித்திரனார் —

**பாட்டுச் சுருக்கம்:**

**ந**ளிமாதத்தோடு கூதிர்காலக் குளிர் அடங்க, சிலை மாதத்தே முன்பனிக்காலம் தொடங்கியமையால் கீழைக்காற்று வீசி இருள்கவிந்த மாலைப் பொழுதைக் குளிரூட்டுகின்றது.

தாமரை மலர்கள் தமக்கடியில் கிடக்கும் அகன்ற இலையின்கண் துயில் கொள்கின்றன. பனி தாக்குதலால் வெப்பத்தை விரும்பிய தூக்கணங் குருவி தன் துணைப் பறவையை நெருங்குகின்றது. வேட்கை மிகுதியால் உயிர் வருந்தும் அன்புமிக்க தன் பெட்டையுடன் ஆந்தைச் சேவல் கூடி மகிழ்கின்றது.

அடுக்கான இதழ்களைக் கொண்ட செவ்வந்தி மலர் ஊர் தொறும் பூத்திருப்பது, விரிந்த வானத்தின்கண்ணுள்ள விண்மீன்கள் கொட்டப்பெற்றிருப்பது போன்று காட்சியளிக்கின்றது.

கழனிபடு செல்வமாகிய நெற்பயிரின் முற்றிச் சாய்ந்த கதிர் களினின்று உதிரும் நென்மணிகளைக் கண்டு உழவர் பெருமக்கள் உள்ளத்தே உவகை கொள்கின்றனர்.

கதிரவன் தோன்றுதற்கு முன்னரே துயிலெழுந்த, மீன்போலும் கண்களையுடைய இளம்பெண்கள் நிலத்தை மறைக்குமாறு அடர்ந்திருக்கும் பூசுணைக் கொடியினின்றும் பொன் போலும் நிறத்தை யுடைய பூக்களைக் கொய்து தம் இல்லத்தின் முன்னிடத்தே தாம் வரைந்த கோலத்தின்கண் இடம்பட விரித்து வைத்திருக்கின்றனர்; உடலிற் குளிர் வருத்தம் நீங்குமாறு குன்றத்தின் மேலெழுந்து வரும் கதிரவனின் இளவெயிலிற் காய்கின்றனர்.

பொதுவிடத்தே கூத்தாடுதலைத் தொழிலாகக் கொண்ட கலைஞர் கள் ஆடுகளத்தின்கண் ஒரு பகுதியை ஒதுக்கி அங்கே கம்பளியால் தம் உடலை வெப்பமுறப் போர்த்திக்கொண்டும் குளிர்மிகுதியால் ஒடுங்கிப் படுத்திருக்கின்றனர். கதிரவன் தோன்றி வந்து எழுப்பிவிடவே, குளிர் காய்தற்கு வெயிலுள்ள இடத்தே ஆண்மக்கள் கூடுகின்றனர்.

திருமணமான மகளிர் குளிர்மிகுந்த முன்னிராப் பொழுதைத் தம் கணவர்தம் அணுக்கத்தில் மகிழ்ச்சியாகக் கழிக்கின்றனர்.

முழுநிலவின் ஒளிதோய்ந்த முற்றத்தே துயில்கொண்ட அடர்ந்த கூந்தலையுடைய கன்னியர் நீரின்கண் முங்கிக் குளித்து வந்து தம் இல்லப்புறத்தை எழிலுறப் புதுக்கித் தம் மணநாள் பற்றி எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

புரிகொண்டு கட்டப்பட்ட வைக்கோற் பொதிந்த வீட்டுக் கூரையின்கண், படர்ந்துள்ள நீண்ட சுரைக்கொடியினின்றும் பிஞ்சு விட்டிறங்கிய காய்கள் பதிந்திருக்கின்றன.

மேல்வந்து மொய்க்கும் வண்டுகள் மிழற்றுகின்ற மெல்லிய ஓசையால் பூந்தாது சிதறுமாறு மலர்கின்ற மாவின் பூங்கொத்துகள் குளிர்ச்சி பொருந்திய நறுமணத்தைப் பரப்புகின்றன. வேருள்ள அடிப்பகுதி வெளிறுமாறு அழகிய நிறங்கொண்டு உச்சியிற் பூவைத் தாங்கி நின்ற கரும்புகள், ஒலியெழுப்புகின்ற ஆலைச் சருக்கரத்தின்கண் சிக்குற்று நிலையழிதலால் அவற்றினின்றும் சாறு ஒழுகுகின்றது. அழகிய வளையலை யணிந்த மகளிர் அச் சக்கையை எரியூட்டிய அடுப்பின் கண் கருப்பஞ்சாற்றைக் காய்ச்சி இனிய சுவைமிகுந்த வெல்லக் கட்டிகளாகத் தெளிவுற வார்க்கின்றனர்.

வானளாவ உயர்ந்த பனையினது வரிகளுடைய பழத்தை வெப்பமிக்க தீயினிடத்தே வெதும்பச் சுட்டு அதன் சதைப்பகுதியைக் கொட்டை வெளுப்பேறும்படி சப்பி அதனை வீசி யெறிய, அக்கொட்டை விழுந்த இடத்தில் புதைந்து வேர்வீழ்த்த கிழங்கைத் தோண்டிக் கொணர்ந்து அதனைத் தீயில் வாட்டிச் சிறுவர்கள் சுவைத்து உண்கின்றனர்.

சிலை மாதம் கழிந்தது; எதிர்நோக்கி யிருந்த சுறவம் வந்துற்றது!

உழுதொழில் நிறைந்த பழைமையான ஊர்களில் மக்களெல்லாம் பயிர் விளைச்சலைக் கண்டு மகிழ்ந்து விழாக் கொண்டாடுதலை மரபாகக் கொண்ட பெருமைபொருந்திய தமிழகம் எங்கணும் சுறவம் பிறந்தமையால் வழிபிறந்தது என்று விழா நிகழ்த்தினர்; இல்லந்தொறும் மங்கல வாழ்த்தொலி நிறைந்தது!

குங்குமச் சாந்தொடு சந்தனத்தையுங் கலந்தவாறு பூக்களை நிறைத்துக் கொண்டு ஆறுகளில் புதுநீர் ஓடுகின்றது.

கதிரவனை வாழ்த்துவதொடு சிறந்து விளங்கும் பொங்கல் நன்னாளாகிய புத்தாண்டுத் திருநாள் பொலிவுறக் கொண்டாடப் படுகின்றது. எங்கணும் மக்களிடையே ஆர்வமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கின்றன.

சுவர்களிலெல்லாம் சுண்ணம் பூசப்பட்டிருக்கின்றது; பல்வகை வண்ணக் கோலங்கள் தீட்டப்பட்டுள்ளன; தம் செயல் திறம் தோன்ற மக்கள் தம் இல்லங்களைப் புதுமைப்படுத்தியிருக்கின்றனர்.

முன்னை நாளில் உடலுழைப்புச் செய்த காளை மாடுகளுக்கும், ஆக்கள், கன்றுகள் ஆகியவற்றுக்கும் கட்டியுள்ள சலங்கைகள் வழித் தடங்களிலும் வெளியிடங்களிலும் ஒலியெழுப்புகின்றன.

தோகைகள் வளைந்து தொங்கும் கருப்பங்கழிகளை நிறுத்தி வைத்திருக்கின்றனர். புது நெல்லரிசியையும் பாலையும் பானையிலிட்டு உலையேற்றியுள்ளனர். வானில் தோன்றி வரும் கதிரவனை வாழ்த்திப் பாடும் ஒப்பற்ற பேரொலி நிறைந்து மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்குகின்றது!

செங்கதிரோனே! இவ்வுலகம் செல்வங்களையும் சீர்களையும் கொண்டிருக்கின்றது. நின் அழகிய கதிர் வீச்சினால் நிறைந்திருக்கும் உயிரினங்களெல்லாம் வாழ்க்கையில் மேம்பாடு எய்துகின்றன. பசுமை யான நெற்கதிர்களும், கரும்புகளும், புதிய மஞ்சட்கொத்துகளும் கண்டு மக்களின் உள்ளங்கள் மகிழ்ச்சியால் நிறைந்து பொங்குகின்றன. புது வாழ்வு மலர்ந்துள்ளது. பொங்கலோ பொங்கல்!

மண்ணை உழுது உலரச்செய்து, அதன்கண் எருவைக் கலந்து மடைவழியே நீரைப் பாய்ச்சிப் பயிரைக் கண்போலக் காத்துவளர்த்த உழவர்க்கு மகிழ்ச்சியளிக்க அவர்தம் கைகளில் பொன்போலும் நென் மணிகளை விளைவித்துக் கொடுத்த நிலமகளைப் பொருந்திய கதிரவனை வாழ்த்தி வானம் அதிரும்படி நாம் முழக்கமிடுகின்ற விழாவே பொங்கல் விழாவாகும்! இல்லந்தொறும் இன்பம் நடம் புரியும் விழாவே பொங்கல் விழாவாகும்!

கதிரவன் தோன்றுவதற்கு முன்னரே உழைப்பைத் தொடங்கிக் கதிரவன் மறைவுக்குப் பின்னர் வீட்டுக்குத் திரும்பி உடலினின்றும் சிந்துகின்ற வேர்வையைப் போக்கிக்கொண்டு ஓய்வுகொள்ளும் நேரத்தில், ஒலிக்கின்ற வளையல் அணிந்த கையால் அணைத்தவளாகிய மனையாளொடு அன்பு ததும்பப் பேசியவாறு முதிர்ந்த நெற்பயிரை அறுவடை செய்தவர்கள் நாம். பொங்கல் வாழ்த்து முழங்குக! உழைப்பின் பயனை உலகுக்கெல்லாம் வழங்கியவர்கள் நாம். பொங்கல் வாழ்த்து முழங்குக!

ஏர் செல்லுதற்குத் தடையாக இருந்த மேட்டை அழித்தும் பள்ளத்தை மேடாக்கியும் நீரைப் பாய்ச்சியதன் பயனாக வளர்ந்த பயிரைக் கண்ணயராதபடி தொடர்ந்து காத்ததனால் விளைச்சல் கிட்ட, அவ் விளைபயனை எல்லோர்க்கும் எடுத்தெடுத்து வழங்கு பவர்கள் நாம். பொங்கல் வாழ்த்து முழங்குக! நமக்கும் பிறர்க்கும்

வழங்காதவர்களுக்குங்கூட வழங்குபவர்கள் நாம். பொங்கல் வாழ்த்து முழங்குக!

வான்முகில் பொழிந்த மழையின் பயனாகவும் காற்றின் பயனாக வும், வளைவுகொண்ட ஏர் உழவுசெய்தமையால் நிலம் விளைத்தளித்த நெல்லை, மகளிர் தம் அணிகலனாக அமைந்த வளையல்கள் ஒலிக்கக் குத்தித் தீட்டிப் புடைத்தெடுத்த அரிசியொடு ஆவினம் வழங்கிய பாலை ஊற்றிப் பொங்கல் ஆக்குக! உலகம் முழுவதும் மகிழ்ந்திருக்கப் பொங்கல் ஆக்குக!

— என்று பாடி உள்ளம் உவகைகொள்கின்றனர்.

மக்களின் பெருமை குன்றா வாழ்க்கைக்கு ஏற்ப நன்றி காட்டுமாறு, தமக்குப் பெருந்துணை புரிந்த ஆவினத்தை நீரில் குளிப்பாட்டி, அவற்றின் கொம்புகளுக்கு வண்ணந்தீட்டி வானம் அதிருமாறு முழக்கஞ்செய்து விழாக் கொண்டாடுகின்றனர்.

உயிரினங்கள் பலவும் தழைக்குமாறு பயிரினங்களைப் பெருக்க வல்லதாகிய முன்பனிக் காலத்தின் வருகை இது. அத்தகைய ஆற்றல் வாய்ந்த முன்பனியினது வருகையின் சிறப்பை வளம்பொருந்திய இப் பேருலகம் போற்றும்.

பறவைக் கூட்டங்கள் வாழ்த்திப் பலவகை இசைகளை இயம்புகின்றன. செந்நிறம் பொருந்திய இளங்கதிரொளியை வானத்தே தோன்றும் மூடுபனி மறைப்பினும், ஒளிவிளங்கும் கதிரொளி கலந்தமையால் நிலம் கருவுற்றதன் பயனாகச் சாய்ந்து கிடக்கும் விளைச்சலை அறுவடை செய்தல் நிரம்பிய காலம் ஆதலால் வந்துற்ற முன்பனியின் வருகையை முதிர்ந்த நெற்கதிரையும் கரும்பையும் எதிர்வைத்து வாழ்த்துவோமாக!

## 3. முன்பனி

**காலம் : சிலை - சுறவம் (மார்கழி – தை)**

**நளிமதிக் கூதிர் நடுங்குகுளி ரொடுங்கி**
**வெளிவிளர் சிலையின் முன்பனி விளங்கவும்,**

**கொண்டல் வீசிக் குவியிருள் பனிப்பத்**
**தண்டா மரையடித் தகட்டிலை துஞ்ச,**

**தாக்குறும் பனிக்குத் தழற்கா முற்றுத்**
**தூக்கணங் குருவி துணைமருங் கயர,**

**காந்துயிர் வருந்துங் காதற் பெடையுடன்**
**ஆந்தைச் சேவல் அணைந்துள மகிழ,**

அடுக்கித ழவிழ்செவ் வந்தி அகல்வான்
உடுக்கவிழ்ந் தன்ன ஊர்தொறும் பூப்ப,

கதிரொடு சாய்ந்த கழனிச் செல்வத்து
உதிர்மணிக் குழவர் உள்ளம் உவப்ப,

கதிர்முன் விழித்த கயல்விழிச் சிறுமியர்
பொதியிலைப் பூசுணைப் பொன்பூக் கொய்து

முன்றில் கோலத்து முகம்பட விரித்துக்
குன்றெழு கதிரொளி குளிருகக் காய,

அம்பலக் கூத்தர் ஆடுகள மொதுக்கிக்
கம்பளப் போர்வை கனப்புறப் போர்த்துப்

படுபனிக் கொடுங்க, பரிதிவந் எழுப்பச்
சுடுவெயிற் குளிக்கும் ஆடவர் சூழ்தர,

மணவிழா வயின்ற மங்கையர் மகிழ்வொடு,
கணவர் மருங்கில் முன்னிராப் கழிப்ப,

முற்றப் படுக்கை முழுநிலாக் காய்ந்த
கற்றைக் கருங்குழற் கன்னியர் எழுந்து,

புனல்குடைந் தாடிப் பொலிவுறத் தந்தம்
மனைப்புறம் புதுக்கி மணநினைந் திருப்ப,

வடங்கொடு வேய்ந்த வைபொதி கூரையின்
தடஞ்சுரை நெடுங்கொடித் தவழ்காய் பதிய,

மீதுறும் வண்டிமிமிர் மெல்லிய ஓசையால்
தாதவிழ் மாந்துணர் தண்மணம் பரப்ப,

அடிவேர் விளர அணிநிறம் பாய்ந்து
முடிபூத் தெழுந்த முற்றிய கன்னல்

ஓலத் திரிகையி னுள்ளழிந் திழிதரக்
கோலத் தொடியணி கோதையர் எரியூட்டித்

தேஞ்சுவைக் கட்டிகள் தெளிவுறத் தோய்ப்ப
வான்படு பனையின் வரிபடு கருங்கனி

வெவ்வெரி மருங்கின் விளிரக் காட்டிச்
செவ்வூன் வெளிறக் குதப்பியெறி வன்காழ்

புதைவிடத் தூன்றிப் புடைகிழங் கூழ்ப்பச்
சிதைத்துக் கருக்கிச் சிறுவர் அதக்குற,

உழவுமலி மூதூர் விளைவுகண் டுவந்து
விழாவயர் மரபின் வியன்றமி ழகத்துக்

கழிசிலைத் திங்கள் காத்த சுறவத்து
வழிபிறந் தென்று மன்றல் வகுப்ப

மங்கல வாழ்த்தொலி மனைதொறும் மலியக்
குங்குமச் சாந்தொடுங் குழைவை கலந்து

பொங்கும் புதுப்புனல் பூமலிந் தோடச்
செங்கதிர் வாழ்த்தொடு சிறந்து விளங்கும்

பொங்கற் புதுநாள் பொலிவு நிரம்ப,
எங்கணும் ஆர்வமும் மகிழ்வும் ஏய்வுறச்

சுண்ணச் சாந்தைச் சுவர்தொறும் பூசி
வண்ணக் கோலம் வகைவகை எழுதிக்

கைத்திறங் காட்டிக் கவின்மனை புதுக்கி,
மெய்த்திறங் காட்டி மேனாள் உழைத்த

காளையும் ஆனும் கன்றும் புனைந்து
சாலையும் வெளியும் சலங்கை சிலம்ப

ஒசிந்த கன்னல் உயர நிறுத்திப்
பசுநெல் லரிசி பாலுலை யேற்றி,

வருகதிர் வணங்கி வாழ்த்துப் பாடுமோர்
பெருகொலி நிறைந்து பெருமகிழ் வூட்ட,

*(வேறு)*

செங்கதிர்காண்! இவ்வுலகச் செல்வங்காண்! சீர்காண்!
அங்கதிரால் வாழ்வுயரும் ஆருயிர்காண்! ஆர்ந்த
பைங்கதிர்காண்! கன்னல்காண்! பசுமஞ்சட் குலைகாண்!
பொங்குவகாண் உள்ளங்கள்! பொங்கலோ! பொங்கல்!
பூத்ததுகாண் புதுவாழ்வு! பொங்கலோ பொங்கல்!

மண்ணுணக்கி, எருக்கலந்து, மடைநீரைப் பாய்ச்சி
கண்ணெனவே காத்தவர்க்குக் களிப்பளிக்கக் கையில்
பொன்னெடுத்துத் தந்தவளைப் புணர்ந்தகதிர் வாழ்த்தி
விண்ணதிர நாமுழக்கும் விழாவே பொங்கல்!
வீடெல்லாம் சதிராடும் விழாவே பொங்கல்!

கதிர்வருமுன் உழைப்பெடுத்துக் கதிர்க்குப்பின் மீண்டே
உதிர்வெயர்வை போக்கியுடல் ஒய்வெடுக்கும் வேளை,
அதிர்வளைக்கை அணைத்தவளோ டாசைமிகப் பேசி
முதிர்பயிரை அறுத்தவர்யாம் முழங்குக பொங்கல்!
முழுவுலகும் ஈந்தவர்யாம் முழங்குக பொங்கல்!

தடுத்துயர்ந்த மேடழித்துத் தாழ்வுயர்த்தி நீரை
விடுத்தடுத்து விளைந்தபயிர் விழிவைத்த வாறாய்
அடுத்தடுத்துக் காத்துவிளை வாகிவர யார்க்கும்
எடுத்தெடுத்துக் கொடுப்பவர்யாம்! இயம்புக பொங்கல்!
ஈயார்க்கும் ஈவோர்யாம்! இயம்புக பொங்கல்!

வான்பயந்த நீர்பயந்த, வளிபயந்த பயனால்,
கூன்பயந்த ஏர்புணர நிலம்பயந்த நெல்லைப்
பூண்பயத்த வளைசிலம்பப் புடைத்தரிசி தீட்டி,
ஆன்பயந்த பாலூற்றி ஆக்குக பொங்கல்!
அனைத்துலகும் மகிழ்ந்திருக்க ஆக்குக பொங்கல்!

என்றிசைத் துவப்பக்
குன்றா வாழ்க்கைக் கொன்றிய தாக
நன்றிபடப் பெருந்துணை நல்கிய நிரையம்
மண்ணிநீ ராட்டி மருப்புவணம் பூசி,
விண்ணதிர் முழக்கம் விழாக்கொள, மற்றுப்

பல்லுயிர் பல்கப் பயிரினம் பெருக்க,
வல்ல முன்பனி வருகையீ தன்றே!

வல்ல முன்பனி வருகையீ தாயின்
மல்லல் வியனுலகு மாட்சிமை போற்றுமால்!

பரவிப் புள்ளினம் பல்லிசை படர,
இரவி இளங்கதிர் எழுமஞ் சணைப்பக்

காய்கதி ரொடுநிலங் கலந்துகு லுற்ற
சாய்கதிர் அறுவை சாலுங் காலமால்!

காய்த்த நெற்பயிர், கன்னல் வைத்தெதிர்
வாய்த்த முன்பனி வரவுவாழ்த் துதுமே!

## மிகை அடிகள்

(இப்பருவத்தில் இடம்பெறுவதற்காக குறித்து வைத்திருந்த மிகை அடிகள்)

✡ முட்கிளைச் சிறியிலை முழுமணி இலந்தை
கட்கணைப் பெண்டிர் கனிவாய் குதப்ப,

✡ உதிர்வெண் சிறுபனி யுகுத்த கட்டியாய்
அதிர்மணி முத்தத் தலங்கல் நீக்கக்

✡ கோவைக் கனியிதழ் கொடுவரி வெடிப்பில்
நாவைத் துழவி நங்கையர் வருந்த,

✿ மதம்படப் புல்வாய் மந்தையிற் கூடித்
திதலை மேனி தீப்பட வழுங்கி,

புரள்நெடுங் குழற்குப் பூம்புகை காட்டி
இரவுக் கேங்கி இன்மது வருந்தி

கங்குலி லுறங்கா கழியின் பத்துத்
தங்கி யிருந்து, தணியா வேட்கை

உளவயிற் றங்க உண்கண் மலர்ந்தின்
னிளவெயிற் காய்ங்கால் இன்மெல் லுறக்கத்

தயர்வுற இளஞ்சிறார் அலையடி தலைதலைப்
பெயரப் புன்னுனிப் பெய்பனி சிதறப்

புதர்மிசை மேவிய பூம்புகை வெண்பனிச்
சிதர்தரு முத்தைச் சிறுகதிர் உண்ண,

---

## தென்மொழி வெளியீட்டு உரிமை அறிக்கை!

### (நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச்சட்டம் – 1956)

### 19–ஈ.ஆ.(வகுப்பு 8ஆம் கட்டளைப்படி)

| | | | |
|---|---|---|---|
| 1. | வெளியிடும் இடம் | | : சென்னை |
| 2. | காலமுறை | | : மாதம் ஒரு முறை |
| 3. | அச்சிடுவோர் | பெயர் | : திருவாட்டி மா. தாமரை (எ) மா. கமலம் |
| | | இனம் | : தமிழர் |
| | | முகவரி | : தென்மொழி அச்சகம், சென்னை – 5. |
| 4. | வெளியிடுவோர் : | பெயர் | : திருவாட்டி மா. தாமரை |
| | | இனம் | : தமிழர் |
| | | முகவரி | : தென்மொழி அச்சகம், சென்னை – 5. |
| 5. | ஆசிரியர் பெயர் | | : திருவாட்டி மா. தாமரை சென்னை – 5. |
| | ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும் : | | : திருவாட்டி மா. தாமரை |

மா. தாமரையாகிய நான் மேலே குறிப்பிட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

10–03–1998 மா. தாமரை
சென்னை – 5. (ஒப்பம்)

---

## திருக்கோயில் வழிபாட்டு மொழி:

# மயக்கமும் தயக்கமும்!

### - புலவர் இறைக்குருவனார் -

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு நடைபெற வேண்டும் என்பது, இறை நெறிப் பற்றும் நிறைதமிழ் உணர்வுங் கொண்ட அறிஞர் பெருமக்களின் நீண்ட கால எண்ணம் மட்டுமன்று; தமிழ்மக்களின் உரிமை நல்வாழ்விற்காகக் குரல் கொடுக்கும் அனைவரது கோரிக்கையுமாகும். அதை நிறைவேற்றுதற்குக் கடந்த நாற்பதாண்டுகட்கு முன்னரே மேற்கொள்ளப்பட்ட நன்முயற்சி, இடையிடை நிகழ்ந்த தடை பல கடந்து இன்று ஒருவாறு செயல்வடிவம் பெறும் நிலையெய்தியுள்ளது.

உலகில் உரிமையுடன் வாழும் எந்நாட்டவரிலும் இறை வழிபாட்டில் நம்பிக்கையுடையோர் தம் வழிபாட்டிடங்களில் தாய்மொழியில் வழிபடுவதே வழக்காயிருக்க, நம் தமிழ்மக்களில் கோயிலுக்குச் சென்று வழிபடுவோரும், அவர் தமக்கு அங்கு வழிபாடு செய்விப்போரும் இவ் வியல்பு நெறிக்கு மாறாக நிற்கின்றனர். தாய் மொழிவழி இறைவனைப் பொருளுணர்ந்து போற்றி வழிபடுவதன் சிறப்பை ஒருசிறிதும் அறியாமலும், தங்கள் உரிமையையுங் கடமையையும் உணராமலும், அவற்றை அறிந்துணர்வதில் ஆர்வமும் அக்கறையுங் கொள்ளாமலும் இருத்தலால் தமிழ்வழிபாடு தொடர்பாக அவர்தம் மனநிலையில் மயக்கமும் செயன்முறையில் தயக்கமும் தொடர்கின்றன.

தமிழ்நாட்டின் பெருமைகளுள் தனிச் சிறப் புடையனவாகத் திகழுந் திருக்கோயில்களெல்லாம், பழந்தமிழ்த் திறவோர்தம் மெய்ந் நெறிக் கோட்பாடுகளைக் குறிப்பாகவும், மக்களின் சமய வழிபாட்டு முறைகளை வெளிப்படையாகவும் உணர்த்தி நிற்பன. கண்ணையுங் கருத்தையுங் கவரும் வண்ணம் தமிழர்தம் கலைநலம் மிளிரும் திறமான வேலைப்பாடுகள் வாய்ந்து, தமிழர்தம் நாட்டு வரலாறு, மக்கள் வரலாறு பற்றிய தடயங்களையும் தாங்கி விளங்கும் இக் கோயில்களெல்லாம் தமிழ் அரசர்கள் மற்றும் பெருஞ்செல்வர்களின்

கொடையாலும் தமிழ் மக்களுடைய உழைப்பாலும் எழுப்பப்பட்டவை. இவற்றில் இன்றளவும் நடைபெற்றுவரும் பல்வேறு பூசைகள், திருவிழாக்கள் முதலானவற்றுக்கெல்லாம் நிறுவப்பெற்றுள்ள அறக்கட்டளைகளும், அணிகலன்களும் பிறவுமாக வழங்கப்பட்டுள்ள பொருட்கொடைகளும் தமிழ்மக்களுடையவை. இக் கோயில்களில் நம்பிக்கை வைத்துத் தொடர்ந்து வழிபடுவோரும், காணிக்கைகள் செலுத்துவோரும், திருப்பணிகள் செய்வோரும் பெருவாரியான தமிழ் மக்களே.

இத் திருக்கோயில்கள் தமிழொடுபட்டுள்ள தொடர்போ அளப்பரிது. சமய இலக்கியங்களான நாயன்மார்களின் திருமுறைகளும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களும், பலப் பல தொன்மங்களும் (புராணங்களும்) திருக்கோயில்களின் தொர்டர்புடையனவாகவே எழுந்துள்ளன. எண்ணற்ற சிற்றிலக்கியங்களும், இசைப்பாடல்களும் இன்னபிறவுமெல்லாம் பெரும்பாலும் திருக்கோயில் தொடர்புடையனவே. நாட்டுப்புறப் பாடல்களும்கூட இவ்வகையில் பல உள. அன்றியும் சமய இலக்கண வகையான் அமைந்த மெய்கண்ட நூல்களும் அவற்றின் விரிவான விளக்கங்களுங்கூட இத்திருக்கோயில் வழிபாட்டுக்கு வலுவூட்டுவனவே.

இனி, தேவாரம் முதலான திருமுறைப் பாடல்கள் கொண்ட சிவபெருமான் கோயில்களும், திருநாலாயிரமான ஆழ்வார் தம் அருளிச்செயல்கள் கொண்ட திருமால் கோயில்களுமே ‘பாடல் பெற்ற கோயில்கள்’ என்று பெரிதெடுத்துப் புகழ்ந்து போற்றிக் கொண்டாடப்படுகின்றன; தனியே பதிகம் இல்லாமல் பிற பதிகங்களில் ஊர்ப் பெயர் இடம் பெற்றிருப்பினுங் கூட அவை ‘வைப்புத் தலங்கள்’ என்று பெருமைப்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் இறைவன் நிகழ்த்தியனவாக வழங்கப்பெறும் திருவிளையாடல்களும் அருள் நிகழ்ச்சிகளுமெல்லாம் தமிழொடு தொடர்புடை யனவாகவே அவற்றைப் பற்றித் திருமுறைகள் உள்ளிட்ட அனைத்து நூல்களும் ஒருமுகமாகக் கூறுகின்றன

இவ்வாறெல்லாம் தமிழை வளர்த்துப் பெருமை பெற்றனவும், தமிழால் சிறப்பிக்கப் பெற்றுத் தலைநிமிர்ந்து நிற்பனவுமாகிய தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் வழிபடுவோர்க்கு மட்டுமன்றி வழிபாடு செய்விப்போரில் பெரும் பாலர்க்குங்கூடப் பொருள் விளங்காத வட மொழிச் சொற்களைத் தொடுத்து மந்திரங்களாகக் கொண்டு திருமுன்பில் (சந்நிதியில்) நின்று ஓதி வழிபாடு செய்விக்கும் பெரும்

பயனற்ற முறை இடைக்காலத்தில் அரும்பிக் கடந்த சில நூற்றாண்டுகளிற்றான் வளர்ந்து பரவியுள்ளது என்பது அறியத்தக்கது.

திருமுறைகள், திருநாலாயிரம் முதலான முன்னைச் சமய இலக்கியங்கள் கல்வெட்டுகள் முதலான வரலாற்று மூலங்கள் ஆகியவற்றிலெல்லாம் பெருபாலும் தமிழில் இடம் பெற்றிருந்த இறைவன் இறைவி பெயர்களும் திருக்கோயில் விளங்கும் ஊர்ப்பெயர்களும் திட்டமிட்டுப் பெருவாரியாக வடமொழியில் மாற்றப்பட்டு வழக்கூன்றியுள்ளன.

தில்லை 'அம்பலவன்', 'நடராசா'வாகவும், 'மலைவளர் காதலி' (இராமேசுவரம்) 'பர்வதவர்த்தினி'யாகவும் மாற்றப்பெற்றுள்ளனர். அனைத்துப் பதிவுகளிலும் காஞ்சி 'அருளாளப் பெருமாள்' என்றே இடம் பெற்றுள்ள இனிய தமிழ்ப் பெயர் இன்று 'வரதராசப் பெருமாள்' என்று வடமொழி கலந்து பெருவழக்காகி நிலவுகின்றது. இன்று விருத்தாலசமாக வடமொழியில் நிற்கும் அவ்வூரின் பழமலை, திருமுதுகுன்றம் என்னும் பழம் பெயர்களைப் பதிவுகளில் மட்டுமே காண முடிகிறது.

இவை ஓரோர் எடுத்துக்காட்டு வடமொழி தேவமொழி (தேவபாஷை) என்னுங் கற்பனை உண்மையாக மிகுதியும் பரப்பப்பட்டமையால், அம்மொழியிலேயே அனைத்தையும் மாற்றிவிட மணங் கொண்டு திட்டமிட்டவர்கள் துணைவலியும் துணிச்சலும் பெற்றிருந்த பிற்காலத்திலேதான் திருக்கோயில்களில் தமிழ் வழிபாடு கைவிடப் பட்டு வடமொழி வழிபாடு புகுத்தப்பட்டிருக் கிறது என்று துணியலாம்.

சென்ற நூற்றாண்டுவரை பழனி முருகன் திருக்கோயிலில், அக் கோயிற்கு வழியடிமை பூண்ட பண்டாரங்கள் என்னும் தமிழ்மக்களே தமிழில் பூசை நடத்தி வந்தனர் என்றும், திருமலை நாயக்க மன்னனின் அமைச்சனான இராமப்பய்யன் என்பானே அவர்களை வலக் காரமாக அப் பணியிலிருந்து வெளியேற்றி விட்டுக் கொடுமுடியிலிருந்து கொணர்ந்த வடமொழி வழிபாட்டாளரை அங்குப் பூசைக்கு அமர்த்தினான் என்றும் உள்ள ஐயுறவுக்கு இடனற்ற தெளிவான வரலாற்றால் வடமொழி வழிபாட்டின் பிந்திய நிலையை அறிவதோடு, அதன் தொடக்கமும் வளர்ச்சியும் பற்றிய முந்திய நிலைகளையும் ஊகித்துணரலாம்.

இனி, பழங்காலத்தில் பாடல்களை ஓதியே வழிபாடு

நடைபெற்றது என்பதைத் திருமுருகாற்றுப்படையில் இடம் பெற்றுள்ள வழிபாட்டுப் பகுதியால் (253-76) நன்கறியலாம். மேலும், "அர்ச்சனை பாட்டேயாகும்" என்று நம்பியாரூரரை நோக்கிக் கூறும் சிவபெருமான் வாய்மொழியான சேக்கிழாரடிகள் கூற்றும் குறிப்பாக இதனைச் சுட்டுவதாகக் கொள்ளலாம். அன்றியும், இன்றளவும் சிற்றூர்ப்புறக் கோயில்களில் பூசாரியர் தமிழ்ப் பாடல்கள் பாடியே வழிபாடு செய்துவருதலும் இதனை வலியுறுத்தும்.

காளியம்மன் கோயிலில் அவ்வம்மைக்குப் பூசனை புரிவோர் பல்லியம் முழக்கித் தமிழ்ப் பாடல்களைப் பாடியே வழிபாடு செய்விப்பது இன்றளவும் நடைமுறையாய்த் தொடர்ந்து கொண்டிருக்க, பெருங்கோயில் திருச்சுற்றில் இடம் பெற்றுத் 'துர்க்கை' என்று வடமொழிப் பெயர் சூட்டப்பெற்றிருக்கும் அதே காளியம் மனுக்கு வட மொழிப் பெயர் மாலை (நாமாவளி) மந்திரமாக ஓதப்படுகின்றது.

இவ்வாறு கூறிய அளவில், இன்று நடை முறையிலிருக்கும் திருக்கோயில் வழிபாட்டு முறைகளெல்லாம் 'ஆகமநெறி'ப்பட்டன என்றும், அவை எவ்வாற்றானும் மீறப்படக் கூடாதனவாம் என்றும் சிலர் அழுத்தமாகக் கூறுகின்றனர். ஆகமநெறி என்பது வேள்வி வழிபாடு பற்றிய 'நிகமநெறி'க்கு மாறுபட்டது; திருக் கோயில் வழிபாடு பற்றியது என்ற அளவிலேயே கொள்ளத்தக்கதன்றித் திருக்கோயில் வழிபாட்டிற்கு அரண் செய்யும் தமிழ்நூல் வழக்கிற்கு மாறுபட்டதாகாது.

அன்றியும் இந்நாளில் தோன்றியங்கள் (ஆகமங்கள்) என்று வழங்கப்பட்டு வருவனவெல்லாம் திருக்கோயிலும் அவற்றின் நடைமுறைகளும் பற்றிக் கடந்த சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் - வடமொழி ஏற்றம் பெற்றிருந்த காலத்தில் கோயில் குருக்கண்மார் அம்மொழியில் எழுதி வைத்தனவே யன்றித் தொன்மையானவை யல்ல; 'ஆகமம்' என்னுஞ்சொல் திருவாசகத்திலேயே ஆளப் பெற்றிருப்பினும், அவற்றின் பெயர்களாகச் சில அடுக்கிச் சொல்லப்பட்ட பாடல் திருமந்திர நூலின்கண் இடம் பெற்றிருப்பினும் அவையெல்லாம் பிற்காலத்தன என்றே அறியப்படுகின்றன. இது பற்றி விரித்தெழுதப் புகுந்தால் மிகவும் பெருகும்.

தமிழ்நாட்டில் வடமொழியின் தொடர்பு நீண்ட காலத்ததே யாயினும், வேதம் பயிலவும் அவற்றைக் கோயிலில் ஓதவும் பிற்கால அரசர் களும் பிறரும் ஏராளமான முற்றூட்டுகளும், பொருட்குவையும்,

சலுகைகளும் வழங்கியிருப் பினும் வேதியர்கள் திருவுண்ணாழிகையின் புறத்தே நின்று தாம் பயின்ற வேதத்தை ஓதுவதேயல்லாமல் திருமேனியின் அருகின் நின்று வழிபாடு செய்வாரும் அல்லர்; செய்விக் கவும் குருக்கண்மார் இடங்கொடார். வேதங்கட்கும் வழிபாட்டு மந்திரங்கட்கும் மொழியைத் தவிர வேறு எத்தொடர்பு மில்லை. கோயில் குருக்கண்மார் பெருமை என்று கருதி வடமொழியில் புனைந்து வைத்தனவே வழி பாட்டு மந்திரங்களாக வழங்கிவருகின்றன.

இப்போது நடைமுறையிலிருக்கும் வட மொழி மந்திரங்கள் எல்லாம் அருளாற்றல் வாய்ந்தனவாம் என்றும், தமிழில் புலவர்கள் கூடி எழுதி வைத்திருக்கும் போற்றித் தொடர்கள் மந்திரத் தன்மை உடையன அல்ல என்றும் சிலர் தடை நிகழ்த்துகின்றனர். தமிழில் மந்திரங்களாகத் தொடுக்கப்பெற்றிருப்பனவெல்லாம் பற்பல அருட்செயல்களுக்கு இடமானவை என்று போற்றப்பெறும் சிவநெறித் திருமுறைகளிலும் மால்நெறித் திருநாலாயிரத்திலும் இன்ன பிறவற்றிலும் இடம் பெற்றுள்ள பொருள் பொதிந்த தொடர்களின் தொகுப்பேயாதலால் இவை விழுமிய மந்திரங்களே யாதல் ஒருதலை.

இனி, அறிவுத் துறைகள் நாளுக்கு நாள் மேன் மேலும் பெருகி, எத்தனையோ மாற்றங்கட்கு உட்பட்டுவரும் மக்கள் வாழ்க்கையில் மாற்றப்படக் கூடாதென என்று எவையும் இருக்க முடியாது.

'முன்னைப் பழைமைக்கும் முன்னைப் பழம் பொருளாய்' இருப்பதோடு 'பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியனாய்' விளங்கும் இறைவன் திருக்கோயில்கள் பொருள் பொதிந்த மாற்றங்கட்குப் புறம்பாக இருத்தல் இயலாது. அவ்வாறு இருப்பின் அவை மக்களுக்கு அப்பாற்பட்டனவாகி மக்கட் பகைவர் தம் மறைவிடங்களாகவும் உறைவிடங்களாகவும் மாறிவிடக்கூடும். திருக்கோயில்களின் அமைப்பிலும் நடைமுறைகளிலும் இதுகாறும் எவ்வகை மாற்றமும் நிகழாமலும் இல்லை. கோயில்களில் தமிழ் வழிபாட்டை எதிர்ப்பவர்களும் புறக்கணிப்பவர்களும் இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

இவ்வாறு கூறுங்கால் சிலர், " இறைவனே இல்லை, கோயிலே கூடாது என்னும் போது, அங்கு எம் மொழியில் வழிபாடு நடந்தால் என்ன?" என்கின்றனர். மற்றுஞ் சிலர் "கோயில் களில் நிலவும் எத்தனையோ சீர்கேடுகளுக் கெல்லாம் இத் தமிழ்வழிபாடு எப்படித் தீர்வாகிவிடும்? அவற்றை மூடிமறைக்கக் கூட இது பயன்படுவதாக அமையாதா?" என்று வினவுகின்றனர்.

கடவுள் உண்டா இல்லையா என்பதோ, கோயில் வேண்டுமா, வழிபாடு தேவையா என்பனவோ ஈண்டு ஆராய்ச்சிக்குரியன அல்ல. இருக்கின்ற கோயில்களில் நடக்கின்ற - பெரு வாரியான மக்களுக்காக நடத்தப்படுகின்ற வழிபாடு வேற்றுமொழியில் நடைபெறுவது நீடிக்கலாமா? மக்கள் தம் தாய் மொழியின் மூலம் வழிபடும் உரிமை மறுக்கப்படுவதற்கு உடன் படலாமா என்பவற்றையே கருதுதல் வேண்டும். அனைத்துச் சீர்திருத்தங்களும் இதனாலேயே நிறைவேறிவிடும் என்பதன்று. மொழித் தொடர்பான உரிமையுணர்வைக் கிளர்வித்து விழிப்பூட்டும் இந்நன்முயற்சி, முறையான வேறு எவ்வகைச் சீர்திருத்தத்துக்கும் எதிரானதும் அன்று.

தமிழ் மக்கள் வழிபாட்டு நெறியில் பிற மொழிக் கவர்ச்சியாலும் அடிமை மனப்பான்மையாலும் தாய்மொழியைப் புறக்கணித்தது தான் படிப்படியாகப் பல்வேறு வழுக்கல்களுக்கு வழிவகுத்தது; இழுக்குகளைச் சுமக்க இடஞ் செய்தது; வரலாற்றைத் திசைமாற்றியது. ஆகவே மீண்டும் தலையெடுக்க வேண்டுமானால் அவர்கள் சமயத் துறையில் விழிப்புற வேண்டும்; உரிமை வாழ்வில் நயப்புற வேண்டும். அத்தகைய அறிவையும் உணர்வையும் முறையாகப் பெறுதற்கு முதல்வாயில் தாய்மொழியே.

குடியாட்சி நாட்டில் மக்கள் அனைவரும் தங்களுக்கு இயல்பான மொழியிலேயே எவ்வகைத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ளும் உரிமை பெற்றவராவர். கல்வி கலைத் துறைகளிலோ, ஆட்சி அறமன்றத் துறைகளிலோ, வழிபாடு வாழ்வியல் நிலைகளிலோ தாய் மொழியின் பயன்பாடு மறுக்கப்பட்டுப் பிற மொழிப் பயிற்சி கட்டாயப்படுத்தப்படுமானால் அதுவே அடிமைநிலை என்பதில் ஐயமில்லை. தாய்மொழிப் பயன்பாட்டிற்கு எவ்வகைக் குறைகள் இருப்பினும் அவற்றைக் களைந்து நிறைவு செய்தும், தடைகள் நேர்ந்தால் அவற்றைத் தகர்த்தெறிந்தும், சட்டங்கள் குறுக்கிடு மேல் அவற்றைத் தக்கவாறு திருத்தியும் மக்கள் உரிமை வாழ்வு பெற ஆவன செய்ய வேண்டியது அரசின் கடமை. அக் கடமை தவறினால் ஆட்சி மாறக்கூடும். அது மேலுந் தொடர்ந்தால் அரசியல் அமைப்பேகூட மாறக்கூடும் !

இன்றைய நிலையில் தமிழில் திருக்கோயில் வழிபாடு நடைபெறச் சட்டங்கள் தடையாயில்லை. அரசும் துணையாகவே இருக்கிறது. வழிபாடு செய்வோரும் செய்விப்போருமான மக்கள் தம் மனநிலை தெளிவு பெற வேண்டும். அதற்கு அறிஞர்கள் ஆவன செய்தல் இன்றியமையாதது!



# மக்களவை

**தந்தை பெரியார் தமிழர் கழகம்**

ஐயா.

திரு. கோவை இராமகிருட்டிணன் தலைமையில் இயங்கும் திராவிடர் கழகமும் திரு. ஆனூர் செகதீசன் தலைமையில் இயங்கும் பெரியார் திராவிடர் கழகமும் இணைந்து ஒரே அமைப்பாகச் செயல்பட முடிவு செய்திருப்பதாகத் தினமணி நாளிதழ் ஊர்வலம் பகுதியில் செய்தி வெளியிட்டுள்ளது.

பாரதீய மக்கள் கட்சி தமிழ் நாட்டில் காலூன்ற முற்படும் இவ் வேளையில் இணைந்து செயல்பட முடிவெடித்துள்ளது வரவேற்கத் தக்கது.

தந்தை பெரியாரின் கடும் உழைப்பால் தமிழ்க் குமுகம் அடைந்திருக்கிற பயனை யாரும் மறந்துவிட முடியாது; மறைத்து விடவும் முடியாது.

சென்ற நூற்றாண்டிலிருந்து பல்வேறு அமைப்புகள் பார்ப்பனர் அல்லாதாரின் நலனுக்காகக் குரல் கொடுத்துள்ளன. அவற்றின் தொடர்ச்சி தான் திராவிடர் கழகம்.

மொழி வாரி மாநிலங்கள் பிரிக்கப்படாத அக்காலத்தில் அமைப்புக்குத் திராவிடர் கழகம் என்று பெயர் சூட்டியதை நம்மால் ஓரளவுக்கு விளங்கிக்கொள்ள முடிகிறது. திராவிட நாடு கேட்டுப் போராடியவர்கள் அத்தகைய பெயரை வைத்ததும் அக் காலத்துக்குப் பொருத்தமே. ஆனால் இன்று மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டுத் தென்னாட்டில் வாழும் நான்கு தேசிய இனங்களும் தனித்தனியே தங்கள் இன முன்னேற்றத்துக்கு உழைத்துக் கொண்டிருக்கும் போது எதற்காக இனியும் பொதுப் பெயர் சூட்ட வேண்டும்?

பெரியார் திராவிடர் கழகத் தோழர்களும், திராவிடர் கழகத் (இரா) தோழர்களும் தமிழர்களின் உரிமைப் போராட்டங்களுக்குத் தொடர்ந்து குரல் கொடுத்து வருபவர்கள். ஈழத்தமிழர்க்கானாலும் இங்குள்ள தமிழர்க்கானாலும் இன்னல் வரும்போது போராடுகிறவர்கள்.

அண்மையில் தென் மாவட்டப் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நடந்த தாக்குதல்களைக் கண்டித்து மருத்துவர் கிருட்டிணசாமி தலைமையில் நடந்த கண்டனப் பேரணியில் பெரியார் திராவிடர் கழகம் துணிவுடன் பங்கெடுத்துக் கொண்டது.

தமிழர்கள் தாக்கத்திற்காளாகிறார்கள் என்ற வகையில்தானே இவ்விரு அமைப்புகளும் தொடர்ந்து போராடுகின்றன. அப்புறம் பெயர் வைக்கும்போது மட்டும் ஏன் திராவிடர் கழகம் என்று வைக்கிறார்கள்?

இரு அமைப்பினரும் இணைந்து ஒரே அமைப்பாகச் செயல் படும்போது த.பெ.தி.க. என்று பெயர் வைப்பதற்கு மாறாகத் தமிழர் நலனில் அக்கறை செலுத்துவதை வெளிப்படையாகத் தெரிவிக்கும் வகையில் அமைப்புக்குத் 'தந்தை பெரியார் தமிழர் கழகம்' என்றே பெயர் சூட்ட வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம். செயல்படுத்துவார்களா?

— **முனைவர் ந. அரணமுறுவல்**, கல்ப்பாக்கம்.

## இருபத்தாறு தமிழர்கள் உயிர்காப்பு வழக்குப் பொருட்கொடை

மேனாள் இந்தியத் தலைமையமைச்சர் இராசீவ் கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் அனைவருக்கும் தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கும் முறைகேடான கொடுந்தீர்ப்பை எதிர்த்து உச்சநெறி மன்றத்தில் மேல்முறையீடு செய்வதும் பிறவுமான முயற்சி களுக்குப் பொருள் திரட்டுவதற்காகத் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் அவர்கள் தலைமையில் 26 தமிழர்கள் உயிர்காப்பு வழக்குப் பொருட்கொடை(நிதி)க் குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் இனநல உணர்வுடைய ஆர்வலர்கள் தாராளமாகப் பொருள்வழங்கி உதவ வேண்டுகிறோம்.

காசோலை, வரைவோலை, அஞ்சற் கட்டளை அனைத்தும் 'தமிழர் நிதி' என்னும் பெயரில் மட்டுமே எடுத்து அனுப்புதல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி: *'தமிழர் நிதி'*,** 17/1 நரசிம்மபுரம்,
மயிலார்ப்பூர், சென்னை - 600 004.

## பாளைச் சிறையில் தமிழ்முகிலன் உண்ணாநோன்பு

**மொழிப்போர் ஈகியர்க்கு வீரவணக்கம் செலுத்துமுகமாகவும், 1965-இல் மொழிப்போர் வீரர்களைக் கொன்று குவித்த மேனாள் முதலமைச்சர் பத்தவச்சலத்துக்குத் தமிழக அரசு நினைவு மண்டபம் எழுப்புவதைக் கண்டித்தும் பாளையங்கோட்டைச் சிறைச்சாலையில் கடந்த 26.1.98 அன்று திரு. தமிழ்முகிலன் உண்ணாநோன்பு மேற்கொண்டார்.**

**கொடைக்கானல் குண்டு வெடிப்பு வழக்கில் தொடர்புபடுத்தப்பட்டு வாழ்நாள் தண்டனை கொடுக்கப்பட்டுள்ள திரு. தமிழ்முகிலன் திருச்சியிலிருந்து மாற்றப்பெற்றுப் பாளைச் சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.**

# கைவிட்ட கொள்கைகளும் கைக்கொண்ட சூழ்ச்சிகளும்

அண்மையில் நடந்து முடிந்த தேர்தலின் முடிவுகள் ஒரு புறமிருக்க, ஒவ்வொரு கட்சியினரும் அறிவித்திருந்த அறிக்கைகளையும், நடை முறைகளையும் எடுத்துக் கொண்டால் அக் கட்சிகளின் கொள்கைகளுக்கும் அவ்வறிக்கை – நடை முறைகளுக்கும் நீண்ட வேறுபாடுகள் இருப்பதைக் காணமுடிகிறது.

இவர்களின் கொள்கை அறிவிப்புகள் இப்போது என்ன ஆயின. படிப்படியாக எவ்வாறு மறைந்துபோய்விட்டன. இக் கொள்கைகள் நடைமுறைக்கு வந்துவிட்டனவா? நிறைவேறிவிட்டனவா அல்லது அவற்றின் தேவைகள் இல்லாமல் போய்விட்டனவா என்றால் அதன் தேவைகள் அப்படியே இருக்கத்தான் செய்கின்றன. அக் கட்சிகள் மட்டுமே அவற்றினின்று நகர்ந்து போயிருக்கின்றன.

ஒவ்வொரு தேர்தலிலும் இக்கொள்கைகளைக் கட்டுப்படுத்தக் கூடிய கூறுகள் தோன்றியவண்ணம் இருந்து கழுதை தேய்ந்த கட்டெறும்பு போல் தோற்றமளிக்க வைத்துவிட்டன என்றே தோன்றுகிறது.

அண்மைத் தேர்தல்களில் கட்சிக் கூட்டுகளே கட்டுப்படுத்தும் கூறுகளாக ஆகிவிட்டன. கொள்கையளவிலான கூட்டு இல்லாமல் வெறும் தேர்தல் கூட்டு என்று அறிவிக்க வேண்டிய நிலை அவர்களுக்கு உருவானாலும், கொள்கைகளைக்கூட அறிவிக்க முடியாத அளவில் கூட்டுகள் கட்டுப்படுத்திவிட்டன. சில கட்சிகள் தங்களின் தனித்தன்மையைக்காட்டும் கூறாக வெறும் ‘சின்னம்’ மட்டுமே மிஞ்சியது.

இந்திய விடுதலையால் கிடைத்த குறைந்த பக்க உரிமைகளும் பரவலாக இல்லாமல் இடத்திற்கு இடம் மாநிலத்திற்கு மாநிலம் உரிமை யழுத்த வேறுபாடுகளுடன் இருந்தன.

ஒற்றுமையாக இருந்து விடுதலை கோரிய பெருங்கட்சிகள் விடுதலை கிடைத்த பின், இந்திய ஒற்றுமை கோர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன. இந்திய உரிமையின் ஏற்றத் தாழ்விற்கு இதுவே சான்று.

ஒவ்வொரு மாநிலத்திலும் உரிமைக் கோரிக்கைக்குத் தக இயக்கங்களும் கட்சிகளும் உருவாயின.

தமிழ்நாட்டிலும் பல உரிமைகளை முன்னெடுத்துக் கொண்டு பல்வேறு கட்சிகள் தோன்றின. ஆனாலும் தமிழ்மக்களின் பல இன்றியமையாத கோரிக்கைகளைக் கொள்கைகளாக

மா. பூங்குன்றன்

முன்னெடுத்துக் கொண்டவை திராவிடக் கட்சிகளே. தமிழக மக்கள் அக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுத் திரள்திரளாக அக்கட்சிகளில் சேர்ந்தனர். அக்கொள்கைகள் அனைத்தும் நிறைவேறும் என நம்பினர். அக்கொள்கைகளை முன்னெடுத்த கட்சிகள் அவற்றைத் தொடர்ந்து தம் பதவி எய்தும் வரை கொண்டு சென்றனவா, கொண்டு செலுத்த இயன்றவா என்றால் அதுதான் இல்லை.

குழந்தை கேட்கும் பொருளைத் தராது வேடிக்கை காட்டித் திசை திருப்புவது போல் மக்களும் திசைதிருப்பப்பட்டனர். இந்நிலையைப் பொறுத்தவரை திசைதிரும்புவதில் குழந்தைகளே தாழ்வில்லை எனுமளவில் மக்கள் தங்கள் தேவைகள் அவ்வாறே இருக்க, கவனத்தில் மட்டும் திசைதிரும்பிவிடுகின்றனர்.

கொள்கைகளை நிறைவேற்ற ஆட்சி வேண்டும் என்ற நிலை போய், ஆட்சி வேண்டுவது ஒன்றே கொள்கையாகக் கட்சிகள் அணியமாகிவிட்டன. தாங்கள் முன்னெடுத்த கொள்கைகளை யெல்லாம் கட்சிகளைத் தோற்றுவிப்பதற்கும் வளர்ப்பதற்கும் மட்டுமே பயன்படுத்திக்கொண்டு ஆட்சியை ஏற்றவுடன் நெகிழ்த்து விடுகின்றன.

அக்கொள்கைகளில் ஓரிரண்டை எடுத்துக்கொண்டு அவற்றின் படிநிலை மாற்றங்களைக் கவனித்தாலே இது நன்கு விளங்குகிறது.

தமிழ்நாட்டில் தோன்றிய அனைத்துக் கட்சிகளின் போக்குகளும் இவ்வாறே அமைந்துள்ளதால் கட்சி வேறுபாடின்றி இந் நடைமுறையே நிலவுகிறது. எனவே பின்வரும் செய்திகள் குறிப்பாக ஒரு கட்சிக்கு மட்டுமல்லாமல் பொதுவாகக் குறித்தது.

## 'தமிழ்நாடு தமிழர்க்கே'

இந்திய விடுதலைக்கு என்னென்ன கரணியங்கள் வட இந்திய மக்களுக்கு இருந்தனவோ அவற்றினும் கூடுதலான கரணியங்களை யும் தேவைகளையும் உள்ளடக்கியதாகத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையிருந்தது.

தமிழ் மக்களுக்கும் தமிழ் நாட்டிற்கும் உரிமை தரவல்ல ஒரே வழி என்று வலியுறுத்திய முதல் கோரிக்கை இது. ஆனால் ஆட்சி யிலமர்வதற்காக கைவிடப்பட்ட முதல் கொள்கையும் இதுதான்.

ஆட்சியிலமர்ந்தபின் தனிநாட்டுக்கொள்கை உருமாறித் தன்னாட்சி (சுயாட்சி)க் கொள்கையாக நின்றது. ஒரு காலக் கட்டத்தில் தன்னாட்சி பற்றி எங்கும் மும்முரமாகப் பேசப்பட்டது. அடுத்து வரும் தேர்தல்களில் அது காணாமலே போனது.

இப்போது வேறு யாராவது தனித்தமிழ் நாட்டைப் பற்றி பேசினாலோ நாட்டு இரண்டகம் (தேசத்துரோகம்) என்று குற்றஞ்

சாட்டுமளவிலும் நடவடிக்கை எடுக்குமளவிலும் கட்சியும் ஆட்சியும் கைகோத்துக் கொண்டன.

உண்மையில் அன்றைக்கு அவர்கள் கூறிய காரணங்கள் மாறிவிட்டனவா? ஆள்பவர்கள்தாமே மாறியுள்ளனர்.

## இந்தி எதிர்ப்பு

தமிழ்நாட்டில் பேராயக் கட்சியின் வீழ்ச்சிக்கும் திராவிடக் கட்சியின் ஆட்சி ஏற்பிற்கும் முதல் கரணியமாக இருந்தது இந்தி எதிர்ப்புப் போராட்டம்.

*1965*-இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் மாணவர்கள் நடுவில் எழுந்த போராட்டம். இதற்குத் தூண்டுதலாகச் சிலர் இருந்தனர் என்றாலும் திராவிட கட்சிகள் ஆட்சிக் கட்டில் ஏறுவதற்கான அரசியல் ஊதியத்திற்கு இதைப் பயன்படுத்திக் கொண்டன என்றே கூறமுடியும்.

நடுவணரசின் அமைச்சரவையில் இடம்பெற்ற அண்மைக் காலங்கள் வரை தொடர்ந்து இந்தியின் ஆட்சிமொழி வல்லாளுமைக்கும், செய்தித் தொடர்பு மொழியாக இந்தியைத் திணித்தற்கும் எதிர்ப்பு ஏதும் செய்ய எண்ணக்கூட இல்லை. அன்றைக்குக் காட்டிலும் ஒவ்வொரு நடுவணரசு அலுவலகங்களிலும் வைப்பகங்களிலும் இந்தியை நாள்தோறும் பயிற்றுவதற்குப் பலகைகள் வைக்கப்படுகின்றன. இந்தியைப் பயின்றவர்க்கே பதவியுயர்வு, சலுகைகள் என வெளிப்படையாக அறிவிக்கப்படுகின்ற போதிலும் திரவிடக் கட்சி நடுவணரசு அமைச்சர்கள் ஒருசிறு எதிர்ப்பையும் கொள்கையளவிலும் தெரிவிக்காமல் அமைதி காக்கின்றனர்.

இவையெல்லாம் இந்தித் திணிப்பு இல்லையா?

## பயிற்றுமொழி

தமிழ் பயிற்றுமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் ஆங்கில விரும்பிகள் ஊதிவிட்ட எதிர்ப்பை நேரிட முடியாமல் பின்வாங்கிவிட்டது அரசு.

அதன்பின் ஏற்ற ஆட்சிகளில் தமிழ் பயிற்றுமொழியைத் தெளிவாகக் கைவிட்டது மட்டுமல்லாமல் ஆங்கிலப் பயிற்றுமொழிக்கு உரமிட்டும் வளர்த்தது.

இப்போது தமிழில் பயில்வது ஏளனமாகப் பார்க்கப்படுகிறது. குறைந்த வருவாய்க் குடும்பங்களில்கூடத் தங்கள் பிள்ளைகளை அரசுப் பள்ளிகளில் சேர்க்காமல் தொல்லைப்பட்டு, பணம் செலவழித்துத் தனியார் பள்ளிகளில் ஆங்கில வழியில் சேர்க்க முற்படுகின்றனர். ஆங்கில வழியில் பயிலாவிட்டால் எதிர்காலமே இல்லை என்ற உணர்வு ஊட்டப்பட்டுள்ளது.

அண்டை மாநிலங்களிலும்கூடத் தாய்மொழியில் பயிற்றுவிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாட்டில் மட்டும் இந்த இழிநிலை.

இவைதவிர, இன்றைக்குத் தமிழுக்குச் 'செம்மொழி நிலை' அளிக்க வேண்டும் என்று பேராயக் கட்சிகளில் ஒன்றுகூடக் கோரிக்கை எழுப்பும் அளவில்தான் தமிழால் ஆட்சிபெற்ற திரவிடக் கட்சிகளும் நடுவணரசில் தமிழை ஆட்சிமொழியாக்குவோம் என்று பேச்சளவில் மட்டும் கூறிவ்ருகிறது. தவிர, தமிழை உயர்த்துவதில் ஒன்றிலும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

தமிழீழ மக்களின் உரிமைக்கும் உதவிக்கும் முன்னின்ற திரவிடக் கட்சிகள் இன்றைக்குப் போட்டிப் போட்டுக் கொண்டு பின் வாங்குகின்றன.

கட்சிகள், ஆட்சியில் செயற்படுத்தும் கொள்கைகளை நழுவ விட்டுவிட்டு ஆட்சியைப் பிடிப்பதற்கான சூழ்ச்சிகளைக் கைக் கொள்வதற்கான முறைகளையும் முயற்சிகளையும் பின்பற்றுகின்றன.

தமிழ் மக்களின் முன்னேற்றத்தையே வாழ்நாள் பணியாகக் கொண்ட தலைவர்கள் வழிநடத்திய வரலாற்று மரபைக் கொண்டுள்ள திரவிடக் கட்சிகள்—

தமிழ்மொழி நலனை முன்வைத்து – இன நலனை முன்வைத்து— நாட்டு முன்னேற்றத்தை முன்வைத்து மக்கள் முன் ஆதரவு கேட்டு வந்த திரவிடக் கட்சிகள்—

இந்தத் தேர்தலில் இன்றைக்கு மக்களிடம் ஆதரவு பெறுவதற்காக எடுத்துக்கொண்ட மூலமான செய்தி என்னவெனில்,

எதிர்க்கட்சியில் மிகவும் பிற்காலத்தில் உள்நுழைந்து முதலமைச்சராகி இறங்கி நிற்கும் செயலலிதாவின் இழிவுகளை யும், ஊழல்களையும் விளக்கிக் காட்டப் புகுந்து, அவர் நகையணிந்த படங்கள், புடவை யடுக்குகளும், செருப்பு அடுக்குகளும் ஆன படங்கள், நகைமதிப்புப் பட்டியல்கள் இவற்றை விளம்பரப்படுத்துவதும்—

இது போன்ற தனிமாந்தத் தாக்குதலையே முன்வைத்து அதற்கு ஒரு நடிகரையும் துணைக்கு அழைத்துக்கொண்டு ஒரு பெருமரபுள்ள கட்சி வலம் வந்தது என்பது பேரிழுக்கு!

அதேபோல் கருணாநிதியையும் அவர்தம் குடும்பத்தினரையும் இழிவுபடுத்தியதே தேர்தல் அறிக்கையாக விளம்பரம் வெளியிட் டுள்ளது அ.தி.மு.க.வின் தாழ்ந்த அரசியலாக உள்ளது.

இவை தங்களை முன் வைத்துக்கொள்ளாது பிறரைத் தாழ்த்தி ஆட்சியைத் தட்டிப் பறிக்க எண்ணும் சூழ்ச்சியே யாகும்.

தமிழ் மக்கள் எவ்வாறு எளிமையாக எடையிடப்படுகின்றனர்.

இப்போதுதான் ஏ! தாழ்ந்த தமிழகமே!

*

# நமக்கடிமை இனித்ததென்ன?

—பாவலர் இளஞ்சித்திரன்—

பட்டிமன்றம், பாட்டரங்கம் தாம்நம் தொண்டா?
பாவலர்கள், நாவலர்கள் நினைக்க வேண்டும்!
வெட்டிமன்ற மேடைகளில் சிரிக்க வைக்கும்
வெறும்பேச்சுப் பேசத்தான் நாம்வந் தோமா?
அட்டியின்றி வாழ்ந்தவர்நாம்! அடிமைப் பட்டோம்!
அடடா, ஓ! இன்றெச்சில் இலைகள் ஆனோம்!
வெட்கமில்லை நமக்கதிலே! விலங்க றுக்கும்
வினையாண்மை போனதுவா? ஏன்நாம் இங்கே?

கருத்தரங்கம் ஆய்வரங்கம் தாம்நம் தொண்டா?
காவலர்கள் நாமிந்த மண்ணுக் கன்றோ!
ஒருத்தருக்கும் அந்நினை(வு)இல் லாத தென்ன?
உருப்படியாய்க் கருத்துமில்லை! ஆய்வும் இல்லை!
பொருத்தமின்றி எதைஎதையோ பிதற்றல் அல்லால்
பொறுப்புள்ள ஒருசெயலும் நம்மால் இல்லை!
வருத்தமில்லை! ஏன்நாமும் கூடு கின்றோம்?
வாட்டமில்லை! நமக்கடிமை நினைத்த தென்னே!

ஊர்வலங்கள், மாநாடு நடத்து கின்றோம்!
உறுபயனாய் ஒருபயனும் கண்டோ மில்லை!
யார்தமிழர் ஒற்றுமைக்கென் றிவற்றைச் செய்தார்?
அவரவர்க்கும் அவர்சாதி, மதங்கள் வேண்டும்!
யார்தமிழர் விடுதலைக்கென் றுழைக்கின் றார்கள்?
அவரவர்க்கும் அவர்கட்சி, கொடிகள் வேண்டும்!
நேர்முரணாய் இருக்கின்றோம்! உண்மை இல்லை!
நெடியதமிழ்க் கொடிவழியை மறந்தே விட்டோம்!

நமக்குள்ளே பல்குழுக்கள்! ஒன்றிற் கேனும்
நமதடிமைத் தளையகற்றும் நோக்கம் இல்லை!
நமக்குள்ளே உட்பகைகள்! நரித்த னங்கள்!
நன்மைகளை, உண்மைகளைப் போற்றிக் கொள்ளோம்!
நமக்குள்ளே ஒருவரினை ஒருவர் வீழ்த்தும்
நச்சுமனம்! துறவுமனம் இல்லை நம்பால்!

நமக்குள்ளே பொய்பகட்டு! ஆர வாரம்!
நாமெங்கே பொதுப்பகையை வெல்வ திங்கே?

அருமைமிகு நம்பாட்டன், பூட்டன் மண்ணை
ஆள்வதற்குத் துப்பில்லை! அடிமைக் கேடு!
'விருது'களுக் கலைகின்றோம்! ஆள்கள் சேர்த்து
விலைக்காகில் அதைவாங்கப் பார்க்கின் றோம்நாம்!
வருமிழிவு நமக்கதிலே தெரிவ தில்லை!
மாலைகளில், துண்டுகளில் மகிழ்ந்து போவோம்!
திருவிழந்த நமக்கவற்றால் பெருமை என்ன?
சிந்திக்கச் சிந்திக்கப் புன்மை தானே!

நமதெழுத்துக் கிளைப்பில்லை! களைப்பும் இல்லை!
நாமெழுவோம்! முன்நடப்போம்! ஐயா தந்த
நமதுறுதிக் கிகழ்வில்லை! புகழே என்க!
நாம்புதிய வரலாற்றைப் படைக்கச் செய்வோம்!
நமதெழுச்சி குறைந்ததில்லை! கையா லாகா
நடலைகளும் நாமில்லை; அடங்கிப் போக!
நமதுரிமைப் போர்க்களத்தில் நாமே நிற்போம்!
நமக்கேநாம் துணையாவோம்! பகையை வெல்வோம்!

நமதுமறப் பாடல்களிவ் வுலகை ஆளும்!
நமக்குறக்கம் வருவதில்லை! ஒய்வும் இல்லை!
நமதுபணி தமிழ்க்குழைத்தல்! தமிழி னத்தை
நல்லவண்ணம் மீட்டெடுத்தல்! அதற்கு ழைத்தல்!
நமதுபெருஞ் சித்திரனார் ஐயா நம்மேல்
நம்பிக்கை வைத்ததெல்லாம் அதற்குத் தானே!
நமதுசெயல் அதுநோக்கி இருக்க வேண்டும்!
நாடுவிடு தலைநோக்கிப் போக வேண்டும்!

இயக்கத்தைக் கட்டமைப்போம்! மக்கள் முன்னே
எடுத்ததனைக் கொண்டுசெல்வோம்! நான்நீ என்னும்
மயக்கத்தை விட்டொழிப்போம்! இலக்கி யத்தில்
மானத்தை, வீரத்தை விளைவிப் போம்நாம்!
தயக்கத்தில் வினைஎதுவும் நடவா(து); ஒன்றாய்த்
தமிழ்க்கெழுவோம்! நம்நிலத்தை வென்றெ டுப்போம்!
நயத்தக்க முடிப்போம்நாம்! நாம்பி றந்த
நன்மையினை நோக்கிநடை போடு வோமே!

# ‘பாவலரேறு தமிழ்க்களம்’நோக்கி .....

*“என்னுடல் எனதில்லை*
*தமிழ்விளை வயல்தான்!*
*என்னின்ற விளைவெல்லாம்*
*செந்தமிழ்ப் பயிர்தான்!”*

— என்ற நம் அரும்பெறல் ஐயா அவர்கள் அமைவுற்ற ‘பாவலரேறு தமிழ்க்களம்’ — அமைப்பு முயற்சி குறித்தான கலந்துரையாடல் கடந்த கும்பம் உசு (10.3.98) அன்று மாலை 4 மணி அளவில் நடைபெற்றது.

நம் பாவலரேறு ஐயா அவர்கள் நம்மைவிட்டு நீங்கி மூன்றாண்டுக் காலம் ஆகப் போகிற சூழலில் ஐயா அவர்களின் அரும்பணிகளைப் பற்றித் தொடர்ந்தே நாம் செயல்பட்டு வருகிறோம்.

ஐயா அவர்களின் திருக்குறள் மெய்ப்பொருளுரை முதற்பகுதி, நூறாசிரியம், கற்பனை ஊற்று, ஐயை — ஆகிய நூல்களும் ஐயா அவர்களின் சிறப்பு மலரும், மூன்று ஆண்டுகளின் நாள்காட்டிகளும் என வெளியீட்டு முயற்சிகள் கடும் பொருளியல் இடர்ப்பாடுகளுக் கிடையிலும் நடந்துகொண்டே இருக்கின்றன.

ஐயா அவர்களின் பாடல்கள் தொகுப்பு நூல் **‘கனிச்சாறு’** ஏழு தொகுப்புகளாக வெளிவர அணியமாகிக் கொண்டிருக்கிறது.

இவற்றுக்கிடையில் ஐயா அவர்களின் கொள்கைச் செயற்பாட்டுக் குரிய வினைக்களமான ‘பாவலரேறு தமிழ்க்கள’ அமைப்புக்கென நாம் மேற்கொண்ட முயற்சிகள் தொடக்க அளவிலேயே பயன் நல்கியுள்ளன.

இதுவரை ஏறத்தாழ ஓரிலக்கம் உருபா அளவிலேயே தொகை திரட்டப்பெற்றுள்ளது.

தனியொருவருக்குரிய அல்லது தனிக்கட்சிக்குரிய முயற்சி என்றில்லாமல் தமிழர் அனைவரின் கூட்டு முயற்சியாய்ப் **‘பாவலரேறு தமிழ்க்களம்’** அமைய வேண்டுமென்னும் நோக்கத்திலே நாம் ஈடுபட்டு வருவதால் நம் கடமையும் பணியும் விரிந்தனவும், ஆழ்ந்தனவும் ஆகும்.

எனவே, அப்பணி நிலையினை விளக்கவும், மேற்கொண்டு நாம் செய்ய வேண்டுவன குறித்து ஆயவும் பாவலரேறு ஐயா அவர்களின் 66-ஆவது பிறந்த நாளன்றே (10.3.98) சென்னை — மேடவாக்கத்தில் உள்ள **‘பாவலரேறு தமிழ்க்களத்’**திற்குத் தென்மொழி அன்பர்களும், பிற அமைப்புகளின் பொறுப்பாளர்களும் அழைக்கப் பெற்றனர்.

நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களைப் புலவர் இறைக்குருவனார் அவர்கள் வரவேற்றதோடு தமிழ்க்கள அமைப்புக்கென இதுவரை நடந்து வந்திருக்கிற நன்கொடை திரட்டல் முயற்சியினை விளக்கினார்.

நிகழ்ச்சியை உ.த.மு.க. பொதுச்செயலாளர் திரு. மா.செ. தமிழ்மணி தலைமையேற்று ஒழுங்குபடுத்தினார்.

**'பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளை'** ஒருங்கிணைத்தி ருந்த அக் கலந்தாய்வு நிகழ்ச்சி, அறக்கட்டளை நிறுவனர் திருவாட்டி **தாமரை பெருஞ்சித்திரனார்** அவர்களின் முன்னிலையில் நடைபெற, சொல்லாய்வறிஞர் ப. அருளியார், **தமிழ்த்தேசப் பொதுவுடைமைக்கட்சிப்** பொதுச்செயலாளர் திரு. பெ. மணியரசன், **தமிழ் தமிழர் இயக்கப்** பொதுச் செயலாளர் திரு. தியாகு, **தமிழினத் தொண்டியக்கம்** — திரு. தமிழநம்பி, **தமழுரிமைக் கூட்டமைப்பு மற்றும் தமிழாசிரியர் கழகத்** தலைவர் புலவர் கி.த. பச்சையப்பன், **தமிழ்நாடு மார்க்கசிய இலெனினியக் கட்சி** — திரு. மணிமாறன், **தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்க** ஒருங்கிணைப்பாளர் திரு. தமிழ்மகன், ஆவடித் **தமிழ்ப் பேரவைச்** செயலாளர் திரு. முத்தமிழ்மணி, **தமிழியக்கம்** திரு. அரணமுறுவல், கோபிச்செட்டிப்பாளையம், **தாய்தமிழ்ப்பள்ளி** — தமிழரசு, குன்றத்தூர்ப் **பாவேந்தர் தமிழ்வழிப்பள்ளி** வெற்றிச்செழியன் **தமிழ்க்கலை – அறிவியல் மன்ற** ஒருங்கிணைப்பாளர், திரு. வேம்பையன், **தமிழ்த் தன்னுரிமை இயக்கத்** தலைவர் — பாவலர் மு. இராமச்சந்திரன், **மக்கள் எழுச்சி மன்றம்** — திரு. ப. வேலுமணி மற்றும் தென்மொழி அன்பர்கள் திருவாளர்கள் பாவலர் இளஞ்சித்திரன், குழந்தை ஈகவரசன் குமர. தன்னொளியன், நமிழ்நெஞ்சன், கண்ணன், தமிழ்க்கதிர், பேரா. அரசேந்திரன், செ.வ. புகழேந்தி, பாவலர் எழில்வாணன் மற்றும் பலரும் பங்கேற்றுக் கலந்துரையாடினர்.

***கலந்துரையாடலின் இறுதியில் கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப்பெற்றன.***

1. பாவலரேறு தமிழ்க்கள அமைப்புக்கான முதல்கட்டக் கட்டுமானப் பணிக்கான தொகை திரட்டலை வரும் ஆகத்து மாத இறுதிக்குள் திரட்டிக் கொடுப்பது.

2. பாவலரேறு தமிழ்க்களக் கட்டமைப்புத் தொடர்பான செய்தியை 'தென்மொழி' மட்டுமல்லாமல் தமிழ் மொழி, இன உணர்வுள்ள இதழ்கள் எல்லாவற்றிலும் இடம்பெறுதல் வேண்டும். அவ்வவ்விதழ்களுக்குச் செய்தியைப் பாவலரேறு தமிழ்க்கள அமைப்புக் குழு அனுப்பிடல் வேண்டும்.

### பத்தவச்சலம் நினைவுமண்டபம் திறக்கப்படுவதை எதிர்த்து

## மறியல் போராட்டம்! 50 பேர் தளை!

சென்னையில் முன்னாள் முதலமைச்சர் பத்தவச்சலம் நினைவு மண்டபம் திறக்கப்பட்டதை எதிர்த்துப் பத்தவச்சலம் நினைவு மண்டப எதிர்ப்புக் குழுவின் சார்பில் பல்வேறு தமிழ் இயக்கங்கள் பங்கேற்ற மறியல் போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டத்தில் பங்கேற்ற ஐம்பதுபேரைக் காவல் துறையினர் தடுத்து நிறுத்தித் தளைப்படுத்தினர்.

13.3.98 காலை 9.30 மணிக்குச் சென்னை – கிண்டியில் முதலமைச்சர் மு. கருணாநிதி பத்தவச்சலம் நினைவு மண்டபம் திறப்பதை எதிர்த்து அடையாறு சைகை விளக்கு **(Signal Light)** அருகிலிருந்து தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. பெ. மணியரசன் தலைமையில், பல்வேறு தமிழ் இயக்கத்தவர்கள் கண்டன முழக்கங்களை எழுப்பியவாறு பத்தவச்சலம் நினைவு மண்டபத்தை நோக்கி எழுச்சியுடன் சென்றனர். காந்தி மண்டபத்தின் முன் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டுக் காவல் துறையினரால் தளைப்படுத்தப்பட்டனர்.

தென்மொழி அவைய அமைப்பாளர் புலவர் இறைக்குருவனார், தமிழ் தமிழர் இயக்கப் பொதுச்செயலாளர் தியாகு, தமிழ்நாடு மார்க்கசிய இலெனினியக் கட்சியைச் சேர்ந்த சீராளன், தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் புலவர் கி.த. பச்சையப்பன், உ.த.மு.க. சார்பில் மா. பூங்குன்றன், தமிழினத் தொண்டியக்கச் சார்பில் திருவாட்டி மா. தேன்மொழியருளி, செல்வன் தெள்ளியன் உள்ளிட்ட நூற்றுக்கு. மேற்பட்டோர் தளைப் படுத்தப்பட்டனர்.

தளைப்படுத்தப்பட்டோர் அனைவரும் சென்னை–கோட்டூர்புரம் காவல்நிலையத்தில் சிறைப்படுத்திவைக்கப்பெற்றனர்.

ஊர்வலம் புறப்படுவதற்கு முன்னரே அங்கே குழுமி நின்ற போராட்ட வீரர்கள் பலரைக் காவல்துறையினர் தளைப்படுத்திச் சென்னை– அடையாறு காவல் நிலையத்தில் சிறைப்படுத்தி வைத்தனர்.

முதல்நாள் (12.3.98) நள்ளிரவிலேயே வடசென்னைப் பகுதியில் தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த செயல் வீரர்கள் பலர் தடுப்பு நடவடிக்கையாக அவரவர்களின் வீடுகளிலேயே காவலர்களால் தளைப்படுத்திக் கொண்டு செல்லப்பெற்றுப் புதுவண்ணைக் காவல் நிலையத்தில் சிறைவைக்கப்பெற்றனர்.

கோட்டூர்புரம் காவல்நிலையச் சிறையில் திரு. பெ. மணியரசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. தியாகு, புலவர் இறைக்குருவனார், திரு. மா. பூங்குன்றன், திருவாட்டி தேன்மொழியருளி, புலவர் கி.த. பச்சையப்பன் ஆகியோரும், த.தே.பொ.க.வைச் சேர்ந்த திரு. அ. பதுமநாபன், ஓகநாதன் ஆகியோரும், தமிழ் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த தமிழ்மணி, த.நா.மா.இலெ. கட்சியைச் சேர்ந்த சீராளன் ஆகியோரும் உரையாற்றினர்.

தளைப்படுத்திச் சிறைவைக்கப்பட்டோர் அனைவரும் அன்று மாலை 7 மணியளவில் விடுவிக்கப்பட்டனர்.

# செய்திகள்

## உடுமலைப்பேட்டை அரிமா மறைவு

தென்மொழி யன்பரும், தமிழ்நலப் பணிகளில் முனைப்புற இயங்கி வந்தவருமான உடுமலை அரிமா அவர்கள் அண்மையில் கொடுமையாக மறைவுற்றார் என்னும் செய்தியறிந்து பெரிதும் வருந்துகிறோம். கட்டிளமைப் பருவத்தினரான அவரது பெரும்பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தார்க்கும் தென்மொழியன்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திரு. அரிமாவின் படத்திறப்பு நிகழ்ச்சி கடந்த கும்பம் 3 அன்று (15.02.98) உடுமலையில் நடைபெற்றது. சொல்லாய்வு அறிஞர் அருளியார் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அரிமாவின் படத்தைத் திறந்துவைத்து இரங்கலுரை நிகழ்த்தினார்.

## பொள்ளாச்சி வை. செயராமன் மறைவு



நெடுநாளைய தென்மொழி அன்பரும் பாவலரேறு ஐயா அவர்களின் பேரன்பைப் பெற்றவருமான பொள்ளாச்சி திரு. வை. செயராமன் அவர்கள் கடந்த கும்பம் 13 அன்று (25.2.98) இரவு மாரடைப்பால் மறைவுற்றார் என்பதனை அறிவிக்க வருந்துகிறோம். அவர்தம் பிரிவால் வருந்தும் குடும்பத்தார்க்கும் அன்பர்களுக்கும் தென்மொழியின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## மதுரை கி. பழனியப்பனார் மறைவு

தமிழ்நலப் பணிகள் பலவற்றில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தவரும், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் அவர்களின் தந்தையாருமான அறநெறி அண்ணல் கி. பழனியப்பனார் அவர்கள் தமது 90-ஆவது அகவையில் கடந்த கும்பம் 14 அன்று (26.02.98) மதுரையில் இயற்கையெய்தியமையறிந்து வருந்துகிறோம். அன்னாரது இறுதி ஊர்வலம் மறுநாள் (27.02.98) நடந்தது. பல்வேறு இயக்கத்தவர்கள் பங்கேற்றனர். உ.த.மு.க. சார்பில் துணைச் செயலாளர் திரு. அதியமான கலந்துகொண்டார்.

திரு. கி. பழனியப்பனார் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தார்க்கும் இயக்கத்தவர்கட்கும் தென்மொழியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# நமக்கு வந்த மடல்கள்

***0:1647*** ஐயா,

'தென்மொழி' சுவடி : 30, ஓலை : 2 கண்டேன். ஒண்டமிழ்ப் புலவர் செந்தமிழ்த்திரு "இறை" அவர்களின், 'எழுச்சி கொள்க தமிழ்த்தேசியமே' — என்ற அஞ்சா நெஞ்சம் கொண்ட வீரரை– செறிந்த – பாடல்களைப் படித்தேன். என் எண்ண வானில் மின்னிட்டு மறைந்தது அந்த ஒப்பற்ற நிகழ்ச்சி!

தன்னிகரற்றத் தன்மானத்தமிழ்ப்புலவர் பாவலரேறு ஐயா அவர்கள் அன்றொருநாள் 'தென்மொழி'யில் எழுதினார் (91-92. சூலை. செப். நவ. சன) எண்ணற்ற பேடித்தமிழர்கள் – தலைவர்கள் (!) அச்சமுற்று அடங்கிஒடுங்கி, பதுங்கி, இன்னும் சொன்னால் பரத்தைத்தனத்துடன் பல்லிளித்த பொழுது – ஒப்பாரி ஓலமிட்ட பொழுது 'இராசீவின் மறைவு காலத்தால் தேவையானது' என்றும், 'அவரும் – அவர் அன்னையும் முட்புதரும் – முள்மரமும் புற்களும் போன்றவர்கள்' என்றும், 'அழிக்கப்படவேண்டிய தீமைகள்' என்றும் அதற்கும் முன்பே, மூன்றாண்டுகளுக்கு முன்பே – ஓர் அறப்பாடலை யும் எழுதினார் 'இட்டசாவம் முட்டுக' – என்று. உலகின் ஒரே ஒரு ஒப்பற்ற தன்மானப்புலவர் திருவள்ளுவர்தாம் என எண்ணியிருந்த இந்த மண்ணில் மற்றொரு தன்னிகரற்றத் தன்மானத்தமிழ்ப்புலவர் பாவலரேறு ஐயாவையும் இந்தத் தமிழ்மண் இனம் காட்டியது. புறநானூற்றையும் மீறிய மானமறவர் அவர்; அஞ்சாநெஞ்சத்தின் அடியும் முடியும் அவர்; மண்ணும் விண்ணும் அவர்!

அப்படிப்பட்ட மான மறவர்க்குப்பின் மற்றொரு செம்மாந்த புலவர் இந்த மண்ணில் என்று பிறப்பார்? என்று காண்போம்? – என எண்ணியிருந்த நெஞ்சங்கள் ஏராளம்! ஏராளம்! 'தென்மொழி' சுவடி : 30, ஓலை : 2 கண்டபின் உள்ளம் உவப்பில் ஊஞ்சலாடியது. மீண்டும் மற்றொரு பாவலரேறு செந்தமிழ்த்திரு 'இறை' அவர்களே! நெருப்பு வரிகளை உலகின் உச்சியில் நின்று உரக்கப்பாடிய திருமலர் 'இறை' அவர்களின் நெஞ்சுரத்தை உள்ளம் குளிரப் பாராட்டுகிறேன்.

குற்றம் நிறைந்த ஓர் உயிர்க்கு, இருபத்தாறு குற்றமற்ற உயிர்கள் தூக்குக்கயிறை முத்தமிடவேண்டு மென்றால் – குற்றமற்ற இலக்கக் கணக்கான எந்தமிழ் உயிர்களுக்கும் குற்றம் நிறைந்த எத்தனை உயிர்கள் குண்டுகளைக் காண வேண்டும்.

— **அருள்மணி,** வெங்காலூர்.

***0:1648*** ஐயா, வணக்கம்!

கும்ப மாத இதழினைப் படித்தேன். தங்களின் ஆசிரியர் உரை,

ஆசிரியப்பாவில் சிலப்பதிகாரம்போல் எளிமையாக இருக்கின்றது. நடுவர் தீர்ப்பை நன்கு ஆய்ந்து, நயம்பட எழுதியிருக்கின்றீர்கள். சட்டங்களைப்பற்றியும், தீர்ப்புக் கொடுமை யானது என்றும் கண்டித்திருக்கிறீர்கள். உண்மைதான்!

அந்தத் தீர்ப்பைப் போலவே, பத்தவச்சலத்துக்கு நினைவு மண்டபம் கட்டுவதும் கொடுமையானது ஆகும். தமிழக மக்களை இழிவுப்படுத்துவதாகும்; மொழியுணர்வை மழுங்கடிப்பதாகும்.

மேற்கு வங்க முதல்வர் திரு. சோதிபாசு அவர்கள், பொதுவுடைமைக் கொள்கை உடையவர் என்றாலும், அந்த மாநிலத்தின் இன உணர்வையும், மொழியுணர்வையும் கட்டிக் காப்பவர்; போற்றி வளர்ப்பவர். இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட நேதாசி அவர்கள், அம்மாநிலத்துக் குடிமகன் ஆதலால் நேதாசி நூற்றாண்டை மிகச் சிறந்த முறையில் கொண்டாடினார்கள். அவருடைய பெயரில் பரிசு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளனர். அதன் முதல் பரிசு பங்களாதேசத்தை உருவாக்கிய மொழிப்போர் வீரர் முசிபுர் இரகுமானுக்குத்தான். கிழக்குப் பாக்கித்தான் மதத்தால் இசுலாமியமாக இருந்தாலும் மொழியால், உருதுமொழி பேசுவோரும் வங்க மொழி பேசுவோரும் இருந்தனர். உருதுமொழி, வங்கமொழியை அகற்றப் பார்த்தது. அப்போதுதான் மொழியின் அடிப்படையில் கிழக்குப் பாக்கித்தானிடமிருந்து, வங்கத் தேசத்தை உருவாக்கினார் முசுபுர் இரகுமான். அப்படி வங்கமொழிக்கு வாழ்வு கொடுத்த முசுபுர் இரகுமானுக்குத்தான், திரு. சோதிபாசு முதன்முதலாக நேதாசிப் பரிசு வழங்கியிருக்கின்றார். அப்படி மொழிப்போர் வீரர்களை நாமும் மதிக்க வேண்டும்; நினைவு மண்டபம் எழுப்ப வேண்டும். இதற்கு அடிக்கல் நாட்டுவது போல் தென்மொழி கருத்தினை வழங்கியிருக்கிறது. நன்றி

— **பாவை. நடவரசன்,** ஈரோடை.

***0:1649*** பேரன்புடையீர்! வணக்கம்.

தென்மொழிப் பாடல்கள் சிறப்புற அமைந்துள்ளன. (தி.பி. 2029 – கும்பம்) (எதிரிகள் காதில் தெளிவாக. ஓது). இத்தகைய தென்மொழி இதழ் பட்டிதொட்டி எங்கும் பரவிட விரும்புகிறேன்.

எப்படி 'இராமகிருட்டிண விசயம்', 'தர்மசக்கரம்' ஆகிய சமயகருத்து இதழ்கள் ஒவ்வொரு ஆதரவாளர்களின் அன்பளிப்பால் தமிழகம் எங்கும் உள்ள நூல் நிலையங்களில் கிடைக்கின்றனவோ அப்படியே தென்மொழி கிடைக்க வேண்டுகோள் விடுங்கள்.

— **வீரமாமுனிவர் தமிழ்க் கழகம்,** கால்வாய்.

# நூல் அறிமுகம்

## தமிழ் மறைக் காவலர் கா.பொ. இரத்தினம்

ஆசிரியர் : முனைவர் **நா. சுப்பிரமணியன்,** வெளியீடு : 'வள்ளுவர் வழி' பதிப்பகம், 3. தேசி குடியிருப்பு, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600 012. விலை : 7.00.

*"தமிழ் மறைக் காவலர் கா.பொ. இரத்தினம் அவர்களின் எண்பத்து மூன்றாவது அகவையின் போது அவரைப்பற்றிய இந்த வரலாற்று நூலை வெளியிடுவது நினைத்துப் பெருமையடைகிறோம்".*

## வலவனின் நாடக விருந்து!

ஆசிரியர் : ஓவியப்பாவலர் **மு. வலவன்,** வெளியீடு : முத்தையன் பதிப்பகம், 65, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5. விலை : 25.00.

*இத் தொகுப்பில் ஆறு ஒரு கள நாடகங்கள் இடம் பெற்றுள்ளன.*

## கொக்கறை - காணிக்காரர் வாழ்வும் பண்பாடும்!

ஆசிரியர் : **ஞா. இசுடீபன்,** வெளியீடு : திணை வெளியீட்டகம், எண் : 30 பகவதி தங்குமனை, மீனாட்சிபுரம், நாகர்கோயில், குமரி மாவட்டம். விலை : 35.00.

*"இந்த நூலில் 1990 முதல் 1994 வரையிலான கால கட்டத்தில் காணிக்காரர்களிடம் பல்வேறு நோக்கத்திற்காகக் களப்பணி மேற்கொண்டபோது தொகுக்கப்பட்ட செய்திகள் இடம்பெற்றுள்ளன".*

## கோயில் நுழைவுப் போராட்டங்கள்.

ஆசிரியர் : முனைவர் **கோ. கேசவன்,** வெளியீடு : சரவணபாலு பதிப்பகம், 4/117 அ, ஐந்திணைத் தெரு, இந்திரா நகர், கீழப்பெரும் பாக்கம், விழுப்புரம் 605 602. விலை : 55.00.

*தமிழ்க் குமுகத்தில் கற்கோயில் நிறுவப்பட்ட காலந் தொட்டு இன்றுவரை கோயில் ஆள்வினை(நிர்வாகம்), வழிபடும் முறை, நுழைவு உரிமை போன்றவற்றில் செயல்பட்ட/செயல்படும் சாதியக் கருத்தியலையும், சாதி ஆளுமை உணர்வையும் அவற்றை எதிர்த்த ஒடுக்கப்பட்ட/ஒதுக்கப்பட்ட சாதியினரின் மக்கள்திரள் போராட்டங் களையும் இந்நூல் விளக்குகிறது.*

வெளிவந்துவிட்டன!

பாவலரேறு ஐயா அவர்களின்

# கற்பனை ஊற்று

- உரைப்பா நடையில் அமைந்த தூய தமிழ்நூல்.
- "மெய்யறிவும், கற்பனை யாழமும், கலையழகும், பொருள் நுட்பமும், சொற்செறிவும் மிகுந்த கட்டுரைகள்!"
- நல்லெழிலார்ந்த பல்வண்ண முகப்புடன் கூடிய செம்மையான கட்டமைப்பு!
- முன்னைப் பதிப்பில் இடம் பெற்றனவும், பின்னைத் தென்மொழியில் வெளிவந்தனவும், ஆகிய அனைத்துக் கட்டுரைகளும் அடங்கிய முழுமையான பதிப்பு.

விலை : உரு. 40.00

(பதிவஞ்சலிற் பெற உரு. 55 அனுப்புக!)

---

பாவலரேறு ஐயா அவர்களின்

அரிய இலக்கியப் படைப்பு

# ஐயை

- இருபகுதிகளும் இணைந்த பாடநூற் பதிப்பு.
- பொலிவுற விளங்கும் பல்வண்ண ஓவிய அட்டை கொண்டது.
- விலை : உரு. 30.00

(பதிவஞ்சலிற் பெற உரு. 42 அனுப்புக!)

---

- பத்துப் படிகளுக்குமேல் வாங்குவோர்க்கு 20% கழிவு உண்டு.

பிறவிளக்கங்கட்குத் தொடர்புகொள்க!

தென்மொழி நூல்வெளியீட்டு விற்பனையகம்

5, அருணாசலத்தெரு, சென்னை – 600 005.